இது ரகசியம் அல்ல!

டெனிஸ்வரன் விவகாரத்தால் வடக்கு மாகாண சபையின் செயற்பாடு ஸ்தம்பித்துப்போகும் ஆபத்துத் தொடருகின்றது.
டெனிஸ்வரன் இன்னும் சட்டரீதியாக அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்படவில்லை என்று மேன்முறையீட்டுநீதிமன்றம் இடைக்கால உத்தரவு மூலம் பக்கம் 03

பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 11 வெள்ளிக்கிழமை 27.07.2018 | கதிர் 263

# வடமாகாண சபையில் சிலரிடம் அனுமதியில்லாத துப்பாக்கிகள்

## அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் சத்தியலிங்கம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கில் அனுமதியைப் பெற்றுச் சிலர் துப்பாக்கிகளை வைத்திருக்கும் அதே வேளை, இன்னும் சிலர் அனுமதியைப் பெறாமலும் துப்பாக்கி வைத்துள்ளனர்.

- இவ்வாறு வடக்கு மாகாண சபையில் நேற்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் மாகாண முன்னாள் அமைச்சர் வைத்தியர் சத்தியலிங்கம். பக்கம் 14

## அனந்தியிடம் கைத்துப்பாக்கி; ஆதாரங்கள் என்னிடம் உண்டு

### உரிய நேரம் வெளியிடுவேன் என சபையில் நேற்று அஸ்மின் சவால்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் கைத்துப்பாக்கியை வைத்திருக்கிறார் எனப் பொய் எதனையும் நான் கூறவில்லை. கைத்துப்பாக்கிக்கு அவர் விண்ணப்பித்த கடிதம் என்னிடம் இருக் பக்கம் 14

## அடுத்த தேர்தலை இலக்கு வைத்து என்மீது பழி போடுகிறார் அஸ்மின்

### சபையில் நேற்று அனந்தி சாடல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 27

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அடுத்த தேர்தலை இலக்கு வைத்து அஸ்மின் போன்றவர்கள் என் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

- இவ்வாறு குறிப்பிட்டார் வடக்கு மாகாண பெண்கள் மற்றும் சிறுவர் விவகார பக்கம் 14

## பௌத்தத்துக்கு இந்த நாட்டில் இன்று முன்னுரிமை உள்ளதா?

### சீற்றத்தோடு மஹிந்தர் கேள்வி



கொழும்பு, ஜூலை27

நல்லாட்சி அரசினுடைய தற்போதை நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அரசமைப்பில் கூறப்பட்டுள்ள பௌத்த மதத்துக்கான முன்னுரிமை நடைமுறை பக்கம் 14

## இஸ்லாத்துக்கு மாறிய மகனை கத்தியால் தாக்கினார் தந்தை!

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்துக்கு மாறிய மகன் மீது கத்தியால் வெட்டி காயப்படுத்தித் தனது பக்கம் 14

## சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை;

## ராணுவத்தின் விண்ணப்பத்தை நேற்று நிராகரித்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சிறுப்பிட்டி இளைஞர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கிலிருந்து இராணுவத்தினரைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் தரப்பு பக்கம் 14

## வடக்கின் அபிவிருத்திக்கு ஒத்துழைக்காமல் முரண்டு பிடிக்கின்றார் விக்னேஸ்வரன்

### - கோட்டா காட்டம் -



கொழும்பு, ஜூலை 27

தாம் முதலமைச்சராக வந்த காலத்தில் இருந்தே வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அரசுடன் ஒத்துழைக்க மறுத்து முரண்டு பிடித்து வருகின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன். வடக்கு மக்களின் துரதிஷ்டம் இதுதான்!

- இப்படி முதல்வர் விக்னேஸ்வரனைக் காட்டமாக வைதார் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் பக்கம் 03

## வெலிக்கடை சிறைப்படுகொலை நினைவஞ்சலிக் கூட்டம் இன்று

### கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

1983 கறுப்பு ஜூலையில் இடம் பெற்ற வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளின் 35ஆவது பக்கம் 03

## வாள்வெட்டு வன்முறை குறித்து மக்கள் விழிப்படைய வேண்டும்!

### கூறுகிறார் வடக்கு ஆளுநர் குரே



கிளிநொச்சி, ஜூலை 27

வடக்கில் இடம்பெறும் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில், மக்களே சிந்தித்துச் செயற்படவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார். பக்கம் 03

## டெனிஸ் வழக்கில் விக்கியின் மேன்முறையீடு ஏழு வாரங்கள் தள்ளிப்போட்டு ஒத்திவைப்பு

### இனி செப்.5 இல்தான் நீதிமன்றில் எடுக்கப்படும்

கொழும்பு, ஜூலை 27

டெனிஸ்வரன் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவை ஆட்சேபித்து முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்றும் பரிசீலிக்கப்படாத நிலையில் செப்டெம்பர் 5ஆம் திகதிக்கு - ஏழு வாரங்கள் கழித்த ஒரு திகதிக்கு - ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று இந்த மனு உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் வி.ரி. அலுவிஹார, பிரசன்ன ஜெயவர்த்தன, பிரியங்க ஜெயவர்த்தன ஆகியோர் பக்கம் 03

## இஸட் ஸ்கோர் வெளியாகியது

கொழும்பு, ஜூலை 27

2017/2018ஆம் கல்வியாண்டில் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் வெட்டுப்புள்ளி (இஸட் ஸ்கோர்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு க.பொ.த. பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir



# கிளிநொச்சி பொதுச் சந்தையின் புதிய கட்டடத்திற்கு இதுவரை அனுமதியும் இல்லை; நிதியும் ஒதுக்கீடு இல்லை– ஆளுநர் குரே

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சியின் பொதுச் சந்தையின் புதிய கட்டடத்திற்கு தற்போது வரை எவ் வித நிதியும் ஒதுக்கப்படவில்லை, அமைச் சரவை அனுமதி மாத்திரமே கிடைத்துள் ளது என வடக்கு மாகாண ஆளுநர் றெஜி னோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயல கத்தில் சந்தையின் புதிய கட்டடம் தொடர் பாக இடம்பெற்ற விசேட கலந்துரையா டலின் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு –

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கு நகர அபி விருத்தி அதிகார சபையினால் 767 மில்லியன் ரூபாவில் திட்டம் ஒன்று வரை யப்பட்டு அது தொடர்பில் அமைச்சர வைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்தது. ஆனால் அந்தத் திட்டம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனும திக்கு இதுவரை அனுப்பி வைக்கப்பட வில்லை அது அடுத்த வாரமே அனுப் பப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது. எனவே இது



வரைக்கும் எவ்வித நிதியும் ஒதுக்கப்பட வில்லை.

ஆனால், கிளிநொச்சி பொதுச் சந்தை எரிந்த பின்னர் நான் அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும் சுவாமிநாதன் ஆகியோ ருடன் பேசியதற்கு அமைவாக அவர்க ளால் அமைச்சரவை பத்திரம் தயாரிக் கப்பட்டு அனுமதி பெறப்பட்டு 15 கோடி ரூபா நிதி புதிய சந்தை கட்டடம் அமைப்ப தற்கு ஒதுக்கப்பட்டது. அதில் முதற்கட்ட மாக 8 கோடி ரூபா நிதி மாவட்டச் செய லகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.



ஆனால் அது வேறு திட்டத்திற்கு பயன் படுத்தப்பட்டுவிட்டது.

இதன் பின்னர் கிளிநொச்சிக்கான நகர அபிவிருத்தியினை நோக்காகக் கொண்டு மாதிரி சந்தை கட்டடம் ஒன்ற 767 மில்லியன் ரூபாவில் நகர அபி விருத்தி அதிகார சபையினரால் வரை யப்பட்டு அமைச்சரவை அனுமதிக்கு கொண்டு சென்ற போது அங்கு நிதி அமைச்சர் சந்தை அமைப்பதற்கு ஏற்க னவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது பெருமளவு நிதி என்பதனால் தேசிய திட்டமில் திணைக்களத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும் என தெரிவிக்கப் பட்டது.

தற்போது அதற்கான பணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபையினர் மேற் கொண்டு வருகின்றனர். ஒரு வாரத்திற் குள் அந்தப் பணிகள் நிறைவுறும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இன்றைய திகதி வரை இது சம்பந்தமான எந்த நிதி ஒதுக்கீடும் கொடுக் கப்படவில்லை என்பதுதான் உண்மை. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனு மதி கிடைத்தவுடன்தான் இது செயற்பாடு அடுத்தக்கட்டத்திற்கு செல்லும் எனத் தெரிவித்த ஆளுநர் அதேநேரம் இந்த புதிய திட்டமும் இன்னமும் அனுமதிக் கப்படவில்லை என்றும் அவர் கூறியுள் ளார். (க -70)

## இராணுவத்தில் மூக்கை நுழைக்கிறார்!



சரத் பொன்சேகாவுக்கு எதிராக முறைப்பாடு


கொழும்பு, ஜூலை 27

இராணுவ விவகாரங்க ளுக்குள் முன்னாள் இராணு வத் தளபதியும் தற்போதைய அமைச்சருமானபீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா மூக்கை நுழைக்கிறார் என்று ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன விடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநா யக்க, இந்த முறைப்பாட் டைச் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

தனக்குத் தெரியாமல் சரத் பொன்சேகா இராணுவ அதி காரிகளுக்கு உத்தரவுகளை வழங்குகிறார். இடமாற்றங் கள், பதவி உயர்வுகள் குறித் தும் பேசுகிறார் என்றும் ஜனாதி பதியிடம் இராணுவத் தளபதி கூறியுள்ளார் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## அமெ. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இலங்கை வெளிவிவகாரச் செயலர் பேச்சு



இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக அமெரிக்கநாடாளுமன்றஉறுப் பினர்களுக்கு வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரி வசம் விளக்கமளித்துள்ளார்.

அமெரிக்காவுக்குப்பயணம் மேற்கொண்டுள்ள, பிரசாத் காரியவசம், அமெரிக்கநாடாளு மன்றத்தின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களான றொபேர்ட் அடெர்ஹோல்ட், டினா ரைடஸ் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அத்துடன், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரான பில் ஜோன்சனுடனும், பிரசாத்காரிய வசம் பேச்சுக்களை நடத்தி யிருக்கிறார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா – இலங்கை இடையிலான ஒத்துழைப்பு மற் றும், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இதன் போதுபேச்சுநடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் கலந்துரையாடப் பட்டுள்ளது.

### க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தயாராகும்

## வவுனியா பாடசாலை மாணவிகளுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் உதவி

வவுனியா கள்ளிக்குளம் மகாவித்தியாலயத் தில் க.பொ.த சாதாரணதரத்தில் கல்வி கற்று வரும் கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவிகள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை மாதிரி வினாத் தாள்கள் வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனினால் பரீட்சை மாதிரி வினாப்புத்தகம் வழங்கப்பட்டுள்ளன.

மாமடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியிலுள்ள ஒரே ஒரு தமிழ் பாடசாலையான கள்ளிக்குளம் மகா வித்தியாலயத்திற்கு வன்னிப்பிராந்திய பிர திப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் வைத்து பாட சாலை மாணவிகளிடம் நேற்று முன்தினம் வவு னியா வர்த்தகர் சங்கத்தின் நிதி அனுசரணை




யில் வினாப் புத்தகம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ். சுஜன், மற்றும் செயலாளர், பொருளாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (க – 100)

## மன்னார் புதைகுழியில் இதுவரை 53 எலும்புக்கூடுகள் மீட்பு!

மன்னாரில் அகழ்வுப் பணிகள் இடம்பெறும் பெரிய மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 53 எலும் புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன என சட்ட மருத்துவ அதி காரி எஸ்.ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர நுழைவாயிலில், பழைய சதொச கட்டடம் இருந்த பகுதியில், மன்னார் நீதிவான் பிரபாகரன் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணி கடந்த 41 நாள் களுக்கு மேலாக இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வரை 53 எலும் புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 34 எலும்புக்கூடுகள் முத்திரையிடப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு வருகிறது சீனாவின் உயர்மட்டக் குழு

சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டத் தலை வர்களின் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற் கொள்ளவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 1ஆம் திகதி இந்தக் குழு கொழும் புக்கு வரவுள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரி வித்தன.

சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அனைத்துலக திணைக்களத்தைச் சேர்ந்த இந்தக் குழுவினர், இலங்கை அரசியல் கட்சிகளுடன் பேச்சுக் களை நடத்தவுள்ளனர்.

இந்தக் குழுவுக்கு, சர்வதேச திணைக்களத்தின் உதவி அமைச்சர் கோ யேசோ தலைமை தாங்குவார்.

இலங்கையின் அரசியல் கட்சிகளுடன் சீன கம்யூ னிஸ்ட் கட்சி உறவுகளைப் பேணி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

## வெலிக்கடை கைதிகளுக்கு விசேட அறிவித்தல்

கொழும்பு, ஜூலை 27

கைத்தொலைபேசி மற்றும் தொலைபேசி இணைப்புகளை (sim) தம்வசம் வைத்திருக்கும் கைதிகள் அவற்றை உடனடியாக சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு வெலிக் கடை சிறைச்சாலையில் அறிவித்தல் கள் ஒட்டப்பட்டுள்ளன என தெரிவிக்கப் படுகின்றது.

சிறைச்சாலைக்குள் கைதிகள் அடிக் கடி நடமாடும் பிரதேசங்களில் இந்த அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட் டுள்ளன.

சிறைக்கூடங்களுக்குள் தேடுதல் நட வடிக்கை முன்னெடுக்கப்படுவதற்கு முன்பதாக கைத்தொலைபேசிகள் மற் றும் தொலைபேசி இணைப்புகளை அதி காரிகளிடம் ஒப்படைக்கும் கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்படும் எனவும், அவ் வாறு கையளிக்காத கைதிகளுக்கு அதி கபட்ச தண்டனை வழங்கப்படும் என வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைத்தொலைபேசிகள் மற்றும் தொலைபேசி இணைப்புகளை பயன் படுத்தும் கைதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நீதிஅமைச்சு ஏற்கனவே அறிவித்தல் விடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பளித்திருக்கின்றது. ஆகையினால் அவரை அந்தப் பதவியில் தொடர அனுமதிக்க வேண்டும் என்பது பணிப்பு.

ஆனால், அதனை ஏற்க மறுத்து நிற்கின்றார் முதல்வர். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்து முறியடிக்கும் முதல்வரின் முயற்சியும் இழுபறிப்படுகின்றது.

இதற்கிடையில் மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவு தொடர்பில் காத்திரமான முடிவு எடுக்கப்படும் வரை மாகாண அமைச்சர் வாரியத்தின் கூட்டத்துக்குத் தடைபோட்டிருக்கின்றார் ஆளுநர்.

இந்த இழுபறிக்கு என்ன முடிவு – என்ன தீர்வு – என்று எல்லோரும் முழுசிக் கொண்டிருக்கையில் நேற்று வடக்கு மாகாண சபை அமர்வில் ஒரு சிறிய பச்சை வெளிச்ச சமிக்ஞையைக் காட்டியிருக்கின்றார் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

*"இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு ஒன்றை நான் முதல்வரிடம் பிரேரித்துள்ளேன். அதனை அவர் சாதகமாகப் பரிசீலிக்கின்றார் என இன்று காலையில் நேரடியாக எனக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்"* – என்று சாரப்பட சபையில் அறிவித்தார் சிவஞானம்.

அப்படி என்ன தீர்வைத் தமது யோசனையாக சிவஞானம் முன்வைத்திருக்கின்றார் என்று நோண்டித் தேடிப் பார்த்தேன்.

அவைத் தலைவர் சிவஞானத்தின் அரசியல் வில்லன் ஒருவரும் எனது நண்பர். அவர் என்னுடன் பேசும்போது சிவஞானத்தை வேடிக்கையான ஒரு செல்லப் பெயரில் குறிப்பிடுவார். அப்படி அவர் கூறுவதில் கூட நிறைய அர்த்தம் இருக்கின்றது என்பதை முதல்வரிடம் அவைத் தலைவர் சிவஞானம் சமர்ப்பித்த யோசனை பற்றி அறிந்த போது தான் உணர்ந்தேன்.

இப்போதைய பிரச்சினையால் மாகாண சபையின் உயிர்ப்பே – சீவியமே – கேள்விக்குள்ளாகும் நிலைமை உள்ளது. சபையின் சீவியத்தை மீள உயிர்த் துடிப்புள்ளதாக்கும் வகையில் சிவஞானம் தந்திரோபாயமான – சாணக்கியமான – யோசனை ஒன்றை முன்வைத்திருக்கின்றார்.

சீ.வி.கே.சிவஞானத்தை அவரது அரசியல் வில்லனான அந்த நண்பர் *'சீவிக்கத் தெரிந்த சிவஞானம்'* என்று குறிப்பிடுவார். அரசியல் பிழைப்பு நடத்துவதில் தேர்ந்தவர் என்பதுதான் அவரது சிலேடைக் குறிப்பு.

ஆனால் உண்மையில் மாகாண சபையையே சீவிக்க வைக்கவும், உயிரூட்டமாக்கவும் அவருக்குத் தெரியும் என்பதையும் அந்தச் சிலேடைச் சொல் குறிக்கின்றதுதானே.

அவர் ஒரு தகுதிபெற்ற – உரிமம்பெற்ற – கம்பனி செயலாளர். தேர்ந்த சிவில் நிர்வாகி. அதனால் தான் இந்தத் தீர்வு யோசனை அவருக்குள் உதித்திருக்கும் என்று நினைக்கிறேன்.

நேற்றுமுன்தினம் காலையில் அவர் ஆளுநரைச் சந்தித்தார். தமது யோசனைத் திட்டத்தை முன்வைத்தார். ஆளுநரிடம் பச்சைக் கொடி சைகையைப் பெற்றுக் கொண்டு முதல்வர் விக்னேஸ்வரனை அவரது கைதடி சபை மண்டப அலுவலகத்தில் சந்தித்தார்.

முதல்வர் எடுக்க வேண்டிய நடவடிக்கைத் திட்டத்தை விவரித்தார். தாமே ஒரு தாளை எடுத்து தமது கைப்பட ஒரு கடித நகலை எழுதி ஒப்படைத்தார். ஆளுநருக்கு முதல்வர் எழுதுவது போன்று அக்கடிதம் அமைந்தது.

"I am intend to reconstitute..." என்று ஆங்கிலத்தில் தொடங்கியது அந்தக் கடிதம்.

*''எனது அமைச்சர் வாரியத்தை உடனடியாக மறுசீரமைக்க உத்தேசித்துள்ளேன். அதற்காக ஒட்டுமொத்த முழு அமைச்சர் வாரியத்தினதும் இராஜினாமாவாக இந்தக் கடிதத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.*

*எனது புதிய அமைச்சர் வாரியத்தின் உறுப்பினர்களாகப் பின்வருவோரைப் பரிந்துரைக்கிறேன்.*

*நான் உட்பட இந்த ஐவரையும் கொண்ட – மறுசீரமைக்கப்பட்ட – அமைச்சர் வாரியத்தினது பதவியேற்புக்கு விரைந்து ஏற்பாடு செய்து தாருங்கள்."*

– இந்தச் சாரப்பட ஆங்கிலத்தில் அமைந்தது அந்தக் கடிதம்.

ஒரே கடிதத்தில் இருக்கும் அமைச்சர் வாரியத்தினது ஒட்டு மொத்த இராஜினாமாவுக்கான பரிந்துரையையும் புதிய அமைச்சர் வாரியத்துக்கான பரிந்துரையையும் சேர்த்து அந்தக் கடிதம் அமைந்திருப்பது ஒரு 'பக்கா' திட்டம்.

தற்போதுள்ள அமைச்சர் வாரியத்தின் உறுப்பினர்கள் பெயர்கள் இக்கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. அதில் டெனிஸ்வரன் இருக்கின்றார் என ஆளுநர் கருதுவாராயின் அவர் பெயர் இருந்து விட்டுப் போகட்டும். அவரையும் உள்ளடக்கியதான அந்த அமைச்சர் வாரியத்தை ஒட்டுமொத்தமான தமது கடிதத்தின் மூலம் இராஜினாமாச் செய்து பதவியிழக்க வைக்கின்றார் முதல்வர்.

அமைச்சர் வாரிய மறுசீரமைப்பு என்ற பெயரில் அப்படி முதல்வர் பரிந்துரைப்பதற்கு உரித்துண்டு என்பதை ஆளுநரை ஏற்க வைத்து விட்டே இந்த யோசனைத் திட்டத்தை நகர்த்தியிருக்கின்றார் 'சீவிக்கத் தெரிந்த' சிவஞானம் என்ற நரிமூளை சாலி.

அவரது யோசனைத் திட்டத்தை தமது மூத்த ஜனாதிபதி சட்டத்தரணியுடன் ஆலோசித்திருக்கின்றார் முதல்வர்.

அந்தச் சட்டத்தரணியும் அந்தத் திட்டத்தின் சட்ட வலிமை குறித்துத் தாமே சட்டமா அதிபருடன் நேரடியாக உரையாடி அவரது சாதகமான அபிப்பிராயத்தைப் பெறுவார் என முதல்வருக்கு உறுதி கூறியிருக்கின்றாராம்.

அந்த ஜனாதிபதி சட்டத்தரணி மூலம் சட்டமா அதிபர் இந்தத் திட்டத்துக்கு 'ஒகே' செல்வாராயின் பிரச்சினை தீர்ந்து விடும்.

டெனிஸ்வரன்தான் பாவம். நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு மூலம் மீளக் கைக்குக் கிடைத்த அமைச்சர் பதவி வாய்க்குக் கிடைக்காமல் போயிற்றே என்று அவர் கொட்டாவி விட வேண்டியதுதான்.

- மின்னல் -

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

பிட்டகோட்டையில் உள்ள தமது அலுவலகத்தில் நேற்று மாலை தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

எங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் 'வியத் மக' வேலைத் திட்டத்தை, வடக்கு மாகாணத்தில் முன்னெடுப்பதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடையாக உள்ளது. காரணம், கூட்டமைப்பின் மீதுள்ள அச்சம் காரணமாக, எவரும் இந்த நிகழ்வில் இணைந்து கொள்ள முன்வருகின்றார்கள் இல்லை.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், தற்போதைய அரசாங்கத்திடம் நாட்டை ஒப்படைக்கும் போது, வடக்கில் பாதுகாப்புப் படையினர் வசமிருந்த பொதுமக்களின் காணிகளில் 95 சதவீதமானவை, பொதுமக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டிருந்தன. மக்களது காணிகளை மக்களிடம் கையளிக்கும் வேலைத் திட்டத்தை, கடந்த அரசாங்கம், வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது.

வடக்கில் மாத்திரமல்ல, நாட்டின் ஏனைய பகுதிகளிலும், பாதுகாப்புப்படையினரின் தேவை கருதி, பொதுமக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. பொலன்னறுவை போன்ற சிங்களப் பிரதேசங்களிலுள்ள மக்களது காணிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், வடக்கிலுள்ளவர்களைப் போன்று, சிங்கள மக்கள் சண்டைக்கு வந்தார்களில்லையே.

நான், 1974ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்துக்குச் சென்ற போது, பலாலியில் 100 படையினர் மாத்திரமே நிலைகொண்டிருந்தனர். ஆனால் இன்று அங்கு, சுமார் 10 ஆயிரம் படையினர் வரையில் இருக்கலாம். அத்தொகையினருக்கு ஏற்ற நிலப் பரப்பும் அங்கு அவர்களுக்கு வேண்டுமல்லவா?

எவ்வாறாயினும், படையினருக்குத் தேவைப்படாத, தேவைக்கு அப்பாற்பட்ட காணிகளை, பொதுமக்களிடம் ஒப்படைப்பதில், எமக்கு ஆட்சேபனையில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினது ஆட்சிக்காலத்தின் போது, அதாவது, யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர், வடக்கில் எந்தவோர் அபிவிருத்தியையும் செய்வதற்கு, வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் முன்வரவில்லை. கடந்த 2013ஆம் ஆண்டில், அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலுக்கு அவரை அழைத்திருந்த போது, பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற விருந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வரமுடியாதென, 2 மணிக்கு அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தலையீடு மற்றும் அவர்களது வழிநடத்தலின் பிரகாரமே, அவர் எம்மோடு எந்தவொரு நடவடிக்கை குறித்தும் கலந்துரையாட வந்தாரில்லை. இது குறித்து, அவரிடமே கேட்டுப்பார்க்கலாம். மக்கள் நலன் கருதி, வடக்கில் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு, முதலமைச்சருக்கோ அல்லது கூட்டமைப்பினருக்கோ, எந்தவொரு அவசியமும் இருக்கவில்லை என்பதே உண்மை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து, இன்னும் முடிவில்லை. இருப்பினும், அதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்தால், முதலில் பொருளாதார அபிவிருத்தி குறித்தே அவதானம் செலுத்துவேன். எந்தவொரு நாட்டிலும், பொருளாதாரத்தில் அபிவிருத்தி இருந்தால், ஏனைய அபிவிருத்தி அனைத்தும் தானாக இடம் பெறும். அவ்வாறானதொரு பொருளாதார அபிவிருத்தி தற்போது இல்லாதிருப்பதே, மக்கள் விரக்தியடைய காரணமாகி உள்ளது. அதனால், பொருளாதார அபிவிருத்தியே, எமது முதல் இலக்கு.

வடக்கில் முதலில் போராட்டத்தை ஆரம்பித்தவர்களுள் ஒருவர் உமா மகேஸ்வரன். அவரது போராட்ட எண்ணங்களைத் தேடிப் பாருங்கள். பொருளாதார ரீதியில் தாங்கள் தெற்கால் நசுக்கப்படுகின்றோம் என்பதும் அவர்களின் கவலையில் – சிரத்தையில் – ஒன்றாக இருந்தது. ஆனால் அன்று வடக்கிலும் விட மிகமோசமான பொருளாதாரப் பின்னடைவில் அம்பாந்தோட்டையிலும் மக்கள் வாடிக்கொண்டிருந்தார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் விடயத்தில், தனிநபர்களை இலக்குவைக்கப்படுகின்றனர்.

ராஜபக்ஷக்களை இலக்கு வைத்துத்தான் புதிய அரசமைப்பு ஷரத்துக்கள் கொண்டு வரப்படுகின்றன. நாட்டின் பெரும்பான்மையான மக்களின் நலனையும், விருப்பையும் இலக்கு வைத்து அந்த முயற்சி முன்னெடுக்கப்படவில்லை. ஆகையால் அந்த முயற்சியால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை கிட்டும் என்று நாம் நம்பவில்லை.

வெளிநாடுகளுக்குச் சென்றுப் பாரத்தால், தான் தமிழீழத்தான், தான் சிங்களவன் என்ற பாகுபாட்டுடனேயே, இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்; தம்மையும் அப்படியே அறிமுகப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். நாம் இலங்கையர்கள் என்ற நிலைப்பாட்டில் எவரும் இல்லை.

புதிய அரசமைப்பானது, பன்முகப்படுத்தப்பட்ட வகையில், அனைத்தின மக்களுக்கும் அனைத்துமத மக்களுக்கும், எல்லா உரிமைகளும் கிடைக்கும் வகையில் அமைய வேண்டும். – என்றார் அவர்.

## டெனிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில் எடுக்கப்பட்ட பின்னரே ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு சட்டமூலம் தொடர்பில் விசேட கவனிப்பு தீர்மானம் ஒன்றை வழங்க வேண்டிய தேவை உயர்நீதிமன்றுக்கு இருந்தால், நேற்று இந்த ஆயத்துக்கு முன்னால் வந்த அனைத்து வழக்குகளும் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

ஓகஸ்ட் மாதத்தில் இரண்டு வார காலம் நீதிமன்ற விடுமுறை என்பதால் வழக்குகள் நீண்ட தவணைகள் தள்ளிப் போடப்பட்டன என்றும் –

அதுவும், இந்த வழக்கும் நீண்ட நாள் தள்ளிப் போடப்பட்டதற்கான ஒரு காரணம் என்றும் –

நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி முதலமைச்சரின் மேன்முறையீட்டு மனுவை பரிசீலனைக்கு ஏற்பதா என்பதைக் கூட உயர் நீதிமன்றம் கவனத்தில் எடுக்க முன்னர் மேலும் ஏழு வார காலத்துக்கு அது தள்ளிப் போடப்பட்டிருக்கின்றது.

அதனால், டெனிஸ்வரன் தொடர்ந்து அமைச்சராகக் கருதப்பட வேண்டும் என்ற மேன்முறையீட்டு நீதிமன்றம் நான்கு வாரங்களுக்கு முன்னர் வழங்கிய இடைக்கால உத்தரவு அடுத்த ஏழு வாரங்களுக்கு தொடர்ந்து நீடிக்கும், அதை சட்ட ரீதியாக தடை செய்வதற்கு வேறு வாய்ப்பில்லை என சட்டத்துறை வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

''முதலமைச்சரின் மேன்முறையீட்டு மனு மீது நேற்று எத்தனை மணி நேரம் சென்றாலும் விவாதித்து முடிவு காண்பதற்கான விருப்புடனும் தயாருடனும்தான் எமது சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றில் தோற்றினர். அதனை நீதிமன்றுக்கும் அவர்கள் தெரிவித்தனர். ஆனால் மேன்முறையீட்டு மனுதாரரான முதலமைச்சரின் சட்டத்தரணிகள் அதில் அதிக ஆர்வம் காட்டவில்லை." – என்று டெனிஸ்வரன் நேற்று மாலை தெரிவித்தார்.

"மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்த மறுத்ததன் மூலம் முதலமைச்சர் தரப்பு நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தை இழைத்துள்ளது என்பதைத் தெரிவிக்கும் விண்ணப்பத்தை அடுத்த வார முற்பகுதியில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளோம்." – என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று முதலமைச்சர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன், சட்டத்தரணி லக்ஷ்மணன் ஜெயக்குமார் ஆகியோரும் –

டெனிஸ்வரன் சார்பில் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவும் –

எதிர்மனுதாரரான டாக்டர் சத்தியலிங்கம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி நிரான் அங்கிட்டல் ஆகியோரும் –

ஆளுநர் சார்பில் அரச சட்டவாதி ஒருவரும் நீதிமன்றில் முன்னிலையாகினர். (உ)

## வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வடக்கு ஆளுநர், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்திருந்தார்.

இதன் போது, வடக்கில் இடம்பெறும் வாள்வெட்டுக்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தார் அவர்.

இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் சமூகமே விழிப்படைய வேண்டும். இப்போதுள்ள இளைஞர்கள் இணையத்தளம், தொலைபேசி பாவனையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். இவற்றினால் உறவினர்கள் வந்தால் கூட அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு விரும்புவதில்லை. மாறாகத் தனிமையில் இருக்கவே விரும்புகின்றனர். தனிமையிலிருந்து மோசமான திரைப்படங்களைப் பார்த்து அதற்கு ஏற்ப தம்மைச் செயற்படுத்த விரும்புகின்றனர்.

இந்த நிலைமையை மாற்றுவதற்குச் சமூகமே முன்வர வேண்டும். எனவே இது தொடர்பில் பெற்றோர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத தலங்கள் வெறுமனே வழிபாடுகளை மாத்திரம் நடத்தாது சமூகத்தினருக்கு நற்பண்புகளை வழங்குவதற்கு முன்னின்று செயற்பட வேண்டும். அமெரிக்க வல்லரசு நாடாகத்தான் இருக்கின்றது. அங்கும் படையினர் உள்ளனர். அங்கு அதிகமாக போதைப்பொருள் காணப்படுகின்றது. அவற்றை அவர்களாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. – என்றார். (ஐ)

## வெலிக்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம், இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை வீதி, நெல்லியடியில், மாலி சந்திக்கு அருகில், கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறுகின்றது.

ரெலோ ஏற்பாடு செய்துள்ள இந்த நினைவஞ்சலிப் பொதுக் கூட்டத்துக்கு ரெலோவின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமை வகிப்பார்.

புளொட் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி., ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் க.துளசி, ரெலோவின் முன்னாள் எம்.பி ஜனா கருணாகரம், ரெலோ உபதலைவர் பிர சன்னா இந்திரகுமார், ரெலோ உபதலைவரும் கல்முனை மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஹென்றி மகேந்திரன், ரெலோ செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா ஆகியோர் இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுவர். (உ)

காலைக்கதிர்
Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாகாணசபை இழுபறி நீடிப்பு

**வடக்கு மாகாண சபையின் அங்கம் வகிக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் பல்வேறு பிரதிநிதிகளும் அவரசமாக ஒன்று கூடி ஒரு தீர்மானத்துக்கு – தீர்வுக்கு – வரவேண்டிய கட்டாய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டிருப்பதாகக் கருதுகின்றோம்.**

**டெனிஸ்வரன் விவகாரத்தையும், அதையடுத்து அவர் தொடுத்த வழக்கையும், அதன் பின்பு அந்த வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்த இடைக்கால உத்தரவையும் அசிரத்தையுடன் அணுகி மாகாண சபைத் தலைமை கையாண்டமையால் நிலைமை மோசமான சட்டச் சிக்கலுக்குள் வந்திருப்பதாகத் தெரிகின்றது.**

**டெனிஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்பட்டார் என்று கூறப்படும் விவகாரம் உரிய சட்ட ரீதியான முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்று கருதும் மேன்முறையீட்டு நீதிமன்றம், டெனிஸ்வரன் இன்னும் வடக்கு மாகாண சபை அமைச்சர்தான் என்று தனது இடைக்கால உத்தரவில் கூறிவிட்டது.**

**அந்த இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டு இன்னும் மூன்று நாள்களில் ஒரு மாதமாகப் போகின்றது.**

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அந்த இடைக்கால உத்தரவை ஏற்று நடைமுறைப்படுத்த வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மறுக்கின்றார். அந்த உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தடை வாங்குவேன் என்கின்றார் அவர். ஆனால் இன்னும் வாங்கவில்லை.**

**ஆகவே, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு நடைமுறையில் இருப்பதால், அது குறித்து ஒரு தீர்மானம் எடுக்கும் வரை வடக்கு மாகாண அமைச்சர் வாரியத்தைக் கூட்ட வேண்டாம் என்று சபையின் பிரதம செயலாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் எழுத்தில் அறிவித்து விட்டார்.**

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுக்கு எதிராக உயர்நீதிமன்றுக்கு முதலமைச்சர் சென்றாராயினும், அவரால் உடனடியாக, அந்த உத்தரவுக்கு எதிராகத் தடை வாங்க முடியவில்லை. உயர்நீதிமன்றத்தில் அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்று மீண்டும் உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதாயினும், அதன் மீது பூர்வாங்க விவாதத்தை நடத்துவதற்குக் கூட நேற்றும் வாய்ப்பு இருக்கவில்லை என்கின்றன நீதிமன்றச் செய்தி வட்டாரங்கள்.**

**அதாவது, டெனிஸ்வரன் விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு தொடர்ந்து நீடிக்கின்றது. அதனை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் முதலமைச்சர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டை பரிசீலனைக்கு ஏற்று விசாரிக்கலாமா என்று கூட உயர் நீதிமன்றம் இன்னும் ஆராயவில்லை. அதற்கிடையில் அந்த வழக்கு செப்ரெம்பர் 05 ஆம் திகதிக்கு – ஏழு வாரங்களுக்கு – தள்ளிப் போடப்பட்டு விட்டது.**

**அந்தத் தினத்துக்குப் பின்னர்தான் அந்த மனுவை விசாரணைக்கு – பரிசீலனைக்கு – ஏற்பதா என்பதை சட்ட விவாதத்துக்கு விட்டு உயர்நீதிமன்றம் தீர்மானிக்கும். அதன் பின்னர்தான் அந்த மேன்முறையீடு தொடர்பில் எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை உத்தரவு பிறப்பிக்கும். அத்தகைய அழைப்பாணை உத்தரவின் அடிப்படையில் பூர்வாங்க மனுதாரர்கள் – அல்லது மேன்முறையீட்டின் எதிர்மனுதாரர்கள் – நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிட்ட பின்னரே – அவர்களின் வாதத்தை செவிமடுத்த பின்பே – மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை இடை நிறுத்தும் கட்டளை எதையும் வழங்கலாமா என்று உயர்நீதிமன்றம் தீர்மானிக்கும் என சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.**

**இவ்வளவும் செப்டெம்பர் 05 ஆம் திகதி அடுத்த தவணைக்குப் பின்னர்தான் உயர் நீதிமன்றத்தில் நடக்க வேண்டும். அதற்கு மேலும் பல வாரங்கள் எடுக்கலாம்.**

**ஆனால், தற்போதைய வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் ஒக்ரோபர் 25 ஆம் திகதியுடன் காலாவதியாகி விடும். அதற்கு முன்னர் டெனிஸ்வரன் தொடர்பான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை இடை நிறுத்தும் மேலாணை ஏதும் உயர் நீதிமன்றத்திலிருந்து வர வாய்ப்புகள் மிக மிகக் குறைவு என்கின்றன சட்ட வட்டாரங்கள்.**

**அதுதான் நிலைமை என்றால் அதுவரை தற்போதைய அமைச்சர் வாரியம் சட்ட ரீதியாகக் கூட முடியாத நிலைமை நீடிக்கப் போகின்றது.**

**அதாவது, தற்போதைய மாகாண சபையின் எஞ்சியிருக்கும் 90 நாள்களும் கூட அமைச்சர் வாரியம் கூட முடியாமல் அவமே கழியப் போகின்றனவா? அரசியல் தலைமைகள் என்ன செய்யப் போகின்றன?**

# மஹிந்தவின் ஆதரவின்றேல் மைத்திரிக்கு வீழ்ச்சியேதான்

## இப்படிக் கூறுகிறார் டிலான்



கொழும்பு, ஜூலை 27

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதம் கிடைத்தால் மாத்திரமே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரியும் மஹிந்தவும் ஒன்றிணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தாம் அனைவரும் உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில், நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலமிக்கதாக மாற்றவேண்டுமெனில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஒன்றிணைய வேண்டும் என்று அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்திருந்தார். இந்த நிலைப்பாட்டில்தான் நாமும் இருக்கிறோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க வேண்டுமென்றால், மஹிந்தவின் ஆசீர்வாதம் நிச்சயமாக அவருக்குத் தேவையாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இனிமேல் ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பாளராகக் களமிறங்க முடியாது.

ஐ.தே.க.வின் பொதுச் செயலாளரோ அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க களமிறங்குவார் எனத் தெரிவிக்கும்போது, அமைச்சர் ராஜிதவோ பொதுவேட்பாளராக குமார் சங்கக்கார களமிறங்கினால் ஆதரவு வழங்குவோம் எனத் தெரிவித்துள்ளார்.

இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தத் தரப்பினரின் பொது வேட்பாளர் அல்லர் என்பது தற்போது தெளிவாகத் தெரிந்துவிட்டது.

எனவே, அடுத்தத் தேர்தலில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன களமிறங்குவார்.

அப்படியெனில், நிச்சயமாக மஹிந்தவின் ஆதரவு மைத்திரிக்கு வேண்டும். அப்படியானால் மட்டுமே வெற்றி பெற முடியும்.

ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து வெளியேற வேண்டும் என்ற சமிக்ஞையைத்தான் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது மக்கள் வழங்கியுள்ளார்கள் என்பதை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவும் கூறியுள்ளார்.

கடந்த அரசில் ஏற்பட்ட சில குழப்பங்கள்காரணத்தினால்தான் ஐக்கிய தேசியக் கட்சியில் அல்லாமல் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன களமிறங்கினார்– என்றார். (ஐ)

# விஜயகலாவை தற்போதைய அரசு என்றுமே கைது செய்யப் போவதில்லை



உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 27

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை தற்போதைய அரசாங்கம் என்றுமே கைது செய்யாது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

விஜயகலா மகேஸ்வரன் அண்மையில் வெளியிட்ட கருத்து தொடர்பில் அவரை உடனடியாக கைது செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி நீதிமன்றத்திற்குச் செல்லவிருந்தேன்.

அரசு, முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக விசாரணை நடத்தும் விதத்தை பார்த்தால் இதற்கு தீர்வு கிடைக்காது. இதனால், சட்ட நடவடிக்கைகளை எடுப்பது சிரமம்.

இதேவேளை, வடக்குமாகாண முதலமைச்சர் நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுத்துவதற்கான வழியை உருவாக்கி வருகிறார் எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரியான லெப்டினட் கொமாண்டர் பீ.பி.எஸ். ஹேமச்சந்திர எழுதிய நந்திக்கடல் வரை பாதையை அமைத்தது யார்? என்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய போதே கம்மன்பில இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# கோட்டாபய மீதான தற்கொலைத் தாக்குதல்: சந்தேகநபர் முற்றாக வழக்கிலிருந்து விடுதலை

கொழும்பு, ஜூலை 27

கொழும்பு கொள்ளுப்பிட்டி, பித்தளை சந்தியில் கடந்த 2006 ஆம் ஆண்டு, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதல் சம்பவத்திற்கு உதவினார் என குற்றம் சுமத்தப்பட்டிருந்த சர்மா என்ற சைவ சமய குருக்களான ஸ்ரீஸ்கந்தராஜா ஐயரை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் முற்றாக விடுதலை செய்து நேற்று உத்தரவிட்டுள்ளார்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குற்றம் சுமத்தப்பட்டிருந்த குருக்கள் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலம் அவர் சுயமாக வழங்கிய வாக்குமூலம் அல்ல என்பது தெரிய வந்துள்ளது என நீதிபதி கூறியுள்ளார்.

மேலும் இந்த வாக்குமூலத்தை தவிர குற்றம் சுமத்தப்பட்டவருக்கு எதிராக வேறு சாட்சியங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள சர்மா ஐயரை நிரபராதி என்று கருதி வழக்கில் இருந்து முற்றாக விடுதலை செய்யுமாறு அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் கோரிக்கை விடுத்தார்.

இந்தக்கோரிக்கையைஏற்றுக் கொண்ட நீதிபதி சம்பத் அபேகோன், சர்மா ஐயரை வழக்கில் இருந்து முற்றாக விடுதலை செய்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாக சர்மா ஐயர் கடந்த 3 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாளை

28.07.2018
சனிக்கிழமை
நட்சத்திரம் : திருவோணம் பி.இ 4.02 வரை
திதி : பிரதமை பி.இ 4.02 வரை
சுபநேரம் :3.02 – 4.32 வரை
இராகுகாலம் : 9.02 – 10.32 வரை

# வட மாகாண சபைக்கான தேர்தலை பிற்போடும் எண்ணம் 'நல்லாட்சி' அரசின் பலவீனத்தை எடுத்துக் காட்டுகின்றது!

## பரிகசிக்கிறார் கெஹலிய ரம்புக்வெல



கொழும்பு, ஜூலை 27
வட மாகாண சபைக்கான தேர்தலை உரிய காலத்தில் நடத்தாது பிற்போட நினைப்பது 'நல்லாட்சி' அரசின் பலவீனத்தை எடுத்துக் காட்டுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபை தேர்தலை பழைய முறைமையிலே நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்க விடயம். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்குகளை தம் பக்கம் திருப்பிக் கொள்ள அரசு நுணுக்கமான முறையில் தேர்தல் திருத்தச்சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்து புதிய தேர்தல் முறைமையினை நடைமுறைப் படுத்தியது. ஆனால் அரசின் எதிர்பார்ப்பு அரசுக்கே எதிராக அமைந்தது.

இந்த நிலையில் வடமாகாணம் தவிர்ந்து ஏனைய ஐந்து மாகாணங்களுக்கு தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வடமாகாண சபை தேர்தலையே முதலில் நடத்த வேண்டும் ஏனெனில் அம்மாகாணத்திலே பெரும் அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள் காணப்படுகின்றன.

ஆறு மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்துள்ளது. குறிப்பாக வடக்கு மாகாண சபையே தற்போது தேர்தலை வேண்டி நிற்கின்றது. அங்கு உரிய காலத்தில் தேர்தல் நடத்தினால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

ஆனால் அரசு வடக்கு மாகாண சபை தேர்தலை பிற்போட முயற்சிப்பது அதன் நிர்வாக பலவீனத்தையே வெளிப்படுத்துகின்றது என்றும் அவர் கூறியுள்ளார். (க)

## கொழும்பில் சர்வதேச இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சி ஓக.30 முதல்



கொழும்பு, ஜூலை 27
28 ஆவது சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இக்கண்காட்சி மூலம் நாட்டின் பல்வேறு தரங்களிலுமுள்ள உள்நாட்டுக் கைத்தொழிலை ஒரேமேடைக்குக்கொண்டு வரும் நிகழ்வும் இங்கு இடம்பெறும்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சிக்கு, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையும், ஏற்றுமதி அபிவிருத்திச்சபையும் அனுசரணை வழங்குகின்றன.

## விகிதாசாரப்படி தேர்தல்களை நடத்துவதாக இருந்தால் அது குறித்து விரிவாக ஆராய வேண்டியிருக்கின்றது




பழைய விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலேயே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதாக இருந்தால் அது குறித்து விரிவாக ஆராய வேண்டியிருக்கின்றது.

எந்த முறையில் நடத்துவதாக இருந்தாலும் எதிர்வரும் ஜனவரி 5 இல் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின்நிலைப்பாடு என அக் கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்களை பழைய முறையிலேயே நடத்த வேண்டும் என்று நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே பேராசிரியர் பியதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான நோக்கம் இல்லை. அவ்வாறு நிறுத்தப்படக் கூடிய எந்தவொரு பொது வேட்பாளரையும் சுதந்திரக் கட்சி ஆதரிக்காது. அது தனக்கென தனியான வேட்பாளரையே களத்தில் இறக்கும்.

மேலும் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் மேலும் சிலர் சு.க சுயாதீன அணியுடன் இணைய விருப்பதாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறு எந்த இணைவுக்குமான சாத்தியம் இல்லை. அரசில் தற்போது அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த தேர்தல்களில் கட்சியின் வெற்றிக்காக செயற்படத் தயாராகவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கில் தற்போது நிரம்பி வழியும் சுற்றுலாப் பயணிகள்!




இயற்கை வனப்புமிக்க பொத்துவில் – அறுகம்பைக் குடாவுக்கு பெருமளவு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தற்போது வந்த வண்ணம் உள்ளனர்.

இந்த எண்ணிக்கை எதிர்வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொத்துவில், அறுகம்மைக் குடா, மட்டக்களப்பு – பாசிக்குடா, திருகோணமலை, நிலாவெளி கடற்கரைப் பிரதேசங்கள் தற்போது சுற்றுலாப் பயணிகளால் நிரம்பிக் காணப்படுகின்றன எனக் குறிப்பிடப்படுகிறது.

## ஊடு பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்



கொழும்பு, ஜூலை 27
இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கேகாலை மாவட்ட அலுவலகம் தனது எல்லைப் பகுதிக்கு உட்பட்ட பிரதேசங்களில் இறப்பர் உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் ஊடு பயிர்ச் செய்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

கேகாலை, கண்டி, கம்பஹா, குருநாகல் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 110 ஹெக்டெயர் நிலப்பரப்பில் வாழை மற்றும் அன்னாசியை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஊடு பயிர்செய்கைக்காக ஹெக்டெயர் ஒன்றுக்காக ஒன்பதாயிரத்து 880 ரூபா நிதியுதவி வழங்கப்படும் என்று இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கேகாலை பிராந்தியத்தின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## கால்வாயிலிருந்து சடலம் மீட்பு!

பொலன்னறுவை – நிஸ்ஸங்க மல்ல பிரதேசத்தின் கால்வாய் ஒன்றில் இருந்து அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டவர் 30இலிருந்து 35 வயது மதிக்கத்தக்கவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் கொலை செய்யப்பட்டுள்ளாரா? தற்செயலாக தவறி விழுந்தாரா? அல்லது தற்கொலையா? என கண்டறியப்படாத நிலையில் பல கோணங்களிலும் பொலிஸார் தங்களது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை இம்மாதம் நிறைவடைவதற்குள் வெளியிடத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 27
பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை இம்மாதம் நிறைவடைவதற்கு முன்னர் வெளியிட தீர்மானிக்கப் பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற உயர் தர பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படவுள்ளன.

இதன்படி இம்முறை பல்கலைக்கழகத்திற்கு 25 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ள நிலையில், 50 ஆயிரத்திற்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 27
உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் –**

தாவடி, பிள்ளையார் கோவிலடி, வன்னியசிங்கம் வீதி, தாவடி பாடசாலை லேன், பத்தானை, யுவசக்தி வீதி, அண்ணாமலை வீதி, சுதுமலை, மரைவேம்படி, சின்மயபாரதி பாடசாலை வீதி, மாப்பியன் வீதி, கூளாவடி ஆகிய பிரதேசங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் –**

மகாமயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகை, குடாகச்சக் கொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## ஓய்வூதியம் பதிவு செய்வதற்கான கால எல்லை 31 ஆம் திகதி வரை

கொழும்பு, ஜூலை 27
விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் கொடுப்பனவு முறையின் கீழ், மீள பதிவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லை எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இது தொடர்பாக ஓய்வூதிய கொடுப்பனவு பணிப்பாளர் நாயகம் ஜகத் டயஸ் தகவல் தருகையில்; இதுவரையில் மூன்று லட்சத்து 80 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவித்தார்.

முடிந்த வரையில் விரைவாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதுடன் தற்பொழுது ஓய்வூதியம் பெறும் அரச சேவையாளர்கள் இதற்காக மீள பதிவு செய்ய வேண்டியதில்லை.

அரச சேவையில் இருப்போர் மாத்திரமே பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். விதவைகள் உள்ளிட்டோர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு முறைமைகளை முறையாக முன்னெடுக்கும் பொருட்டு இணையத்தள தரவு கட்டமைப்பு ஒன்றை அமைப்பதே இதன் நோக்கமாகும். இதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என ஓய்வூதிய கொடுப்பனவு ஆணையாளர் நாயகம் ஜகத் டயஸ் மேலும் கூறினார்.

# பிரதமர் ரணில் மட்டக்களப்புக்கு விஜயம்



எதிர்வரும் 29 ஆம் திகதி மட்டக்களப்புக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அன்றைய தினம் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மட்டக்களப்பு - ஆரையம்பதியில் முற்பகல் 10 மணிக்கு சுமார் 4 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்கான புதிய மாடிக் கட்டடத் தொகுதியை வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன், வறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் நிகழ்விலும் பிரதமர் கலந்து கொள்ளவுள்ளார்.

# 1 லட்சத்து 25 ஆயிரம் மெ. தொன் நெல் கொள்வனவு; நெல் சந்தைப்படுத்தல் சபைத் திட்டம் - தலைவர் தகவல்



கொழும்பு, ஜூலை 27

விவசாயிகளிடம் இருந்து ஒரு லட்சத்து 25 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய நெல் சந்தைப்படுத்தல் சபை எதிர்பார்த்துள்ளது.

திறைசேரி இதற்கென 490 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது என நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் உபாலி மொஹோட்டி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

உரிய தரத்துடன் கூடிய நெல் கொள்வனவு செய்யப்பட இருக்கிறது. விவசாயிகளின் கையிருப்பில் உள்ள ஈரமான நெல்லை உலர்த்துவதற்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் தலைவர் உபாலி மொஹோட்டி கூறினார்.

# தினசரி ராசி பலன் (27.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை பூரணைத்திதி பி.இ.1.50 மணி வரை பின்னர் பிரதமை. நட்சத்திரம்: உத்தராடம் இரவு 12.35 வரை பின்னர் திருவோணம். சித்தயோகம் இரவு 12.35 வரை பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 10.43 மணி முதல் 12.16 மணி வரை.

**சுபநேரம்** - காலை 6.04 மணி முதல் 7.34 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - திதி இல்லை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- உத்தராடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** மத்திமமான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். நினைத்த கருமத்தில் முடிப்பதில் தடை ஏற்படும். குடும்ப வாழ்வில் நிம்மதி குறையும். வியாபாரிகளுக்கு வர்த்தக முதலீடுகளால் லாபம் குறையும்.

**ரிஷபம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். குடும்பத்தினருக்கு இல்லற வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். புத்திர முன்னேற்றங்களும், நற்காரிய கொண்டாட்டங்களும் மனத் திருப்தியைத் தரும்.

**மிதுனம்** கவலையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். ஆரோக்கியம் பாதிப்படையும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரம் மந்த நிலையில் நடைபெறும். உறவுகளுடன் வீண் சச்சரவுகள் உண்டாகும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். எதிர்பாராத பணச் செலவுகள் ஏற்படும். ஆரோக்கியம் பாதிப்புறும். வாக்குவாதங்கள் தோன்றி மறையும்.

**சிம்மம்** ஆக்கபூர்வமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். நினைத்த காரியம் சித்தியடையும். ஆடம்பரப் பொருள் வியாபாரம் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்தில் செல்வாக்கும் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

**கன்னி** அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். இல்லற வாழ்வில் அமைதி நிலவும். வியாபாரத்தில் லாபங்கள் அதிகரிக்கும். சொந்தத் தொழில் தொடங்குவதற்கு சாதகமான நாள்.

**துலாம்** யோசனையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் உண்டாகும். வியாபாரத்தில் எதிரிகளின் தொல்லைகள் அதிகரிக்கும். உடல் சோர்வடையும்.

**விருச்சிகம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். சமூக சேவையில் பெயர் துவங்கும். வெளிநாட்டு விடயங்களில் எதிர்பாராதவாறு கருமங்கள் அமையும். வியாபாரம் வளர்ச்சியடையும்.

**தனுசு** யோகமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரிகளுக்கு அலங்காரப் பொருள்கள் அதிகம் விற்பனையாகும். தொழிலாளர்களுக்கு ஒப்பந்தங்கள் கைகூடும்.


**மகரம்** இன்பமான நாள். வருமானம் மன நிறைவைத் தரும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் அந்தஸ்து வளர்ச்சி அடையும். பிற நாட்டு வியாபாரம் சிறப்பாக நடக்கும். அடைவு நகைகள் மீட்பார்கள்.

**கும்பம்** குழப்பமான நாள். தனவரவு குறையும். உறவினருடன் அபிப்ராய பேதம் உண்டாகும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் படிப்படியாகக் குறையும். தொழிலாளர்களுக்கு தொழில் விருத்தி குன்றும்.

**மீனம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். உறவினர்கள், அயலவர்களும் நன் மதிப்பு உண்டாகும். இல்லறம் நல்லறமாக விளங்கும். உத்தியோகத்தர்களுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கும்.

சந்திராஷ்டம நாள்; **மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய ஆடிவேல் சித்திரத்தேர் வீதிப் பவனி!



கொழும்பு, ஜூலை 27

கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய ஆடிவேல் சித்திரத்தேர் விழா பவனி நேற்றுமுன்தினம் காலை பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவிலைச் சென்றடைந்தது.

இதன் போது அலரிமாளிகைக்கு அருகில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழிபாட்டில் ஈடுபட்டார். பிரதமருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. அமைச்சர்களான டி.எம். சுவாமிநாதன் மனோ கணேசன் உள்ளிட்ட பலர் விழாவில் கலந்துகொண்டனர்

# பகிடிவதை தொடர்பில் 300 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜூலை 27

இலங்கையில், கடந்த வருடத்தில் பகிடிவதை தொடர்பில் உயர்கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழகங்களில் 300 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் சிரேஷ்ட மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதைக்கு எதிரான சட்டம் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கடந்த நாள்களில் ருகுணு பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு 10 வருட கால சிறைத்தண்டனை விதிப்பதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது என்றும் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

# முள்ளியவளை விபத்தில் ஒருவர் படுகாயம்!



முல்லைத்தீவு, ஜூலை 27

முள்ளியவளை - தண்ணீர் ஊற்று பிரதான வீதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து தண்ணீர் ஊற்று பகுதியில்நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாங்குளம் பிரதான வீதி வழியே பெண் ஒருவரினால் ஓட்டிச் செல்லப்பட்ட காரும், மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மேலும், சம்பவத்தில் படுகாயமடைந்த ஒருவர் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கட்டுநாயக்க விமான நிலையமும் தனியார் மயப்படுத்தப்பட உள்ளது

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 27

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த காலத்தில் இருந்து நாட்டின் தேசிய வளங்களை படிப்படியாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு எதிர்நோக்கும் கடன் சுமையைக் குறைக்க இவ்வாறு தேசிய வளங்களை விற்பனை செய்ய நேர்ந்துள்ளதாக அரசு பதில் கூறினாலும் நேற்றைய தினம் அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்னவின் கருத்துக்கு அமைய அது பொய் என தெரியவந்துள்ளது.

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளை நட்பாக வைத்திருக்க மத்தள விமானநிலையத்தை இந்தியாவுக்கும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கும் வழங்கினோம் என அமைச்சர் ராஜித ஏற்றுக்கொண்டார்.

வெளிநாடுகளுக்கு எதிராக பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு அந்நாடுகளை அரசே பகைத்துக் கொள்ளும் அணுகுமுறையைக் கையாண்டு வருகிறது.

இதேவேளை கட்டுநாயக்க விமான நிலையத்தையும் தனியார் மயப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதனை அடுத்த வாரம் அரசாங்கம் ஆரம்பிக்க உள்ளது எனவும் டி.வி.சானக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# அமைச்சரவையின் ஆதரவுடனேயே மரண தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதி தீர்மானித்தார் என்கிறார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க



கொழும்பு, ஜூலை 27

அமைச்சரவையின் பூரண ஆதரவுடனேயே மரண தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதி தீர்மானித்தார்.

அத்துடன் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதில் சர்வதேச அழுத்தங்களுக்கு ஜனாதிபதி ஒருபோதும் அடிபணியமாட்டார் என துறை முகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டுக்குள் போதைப் பொருள்கள் அதிகரித்துள்ளன என்றும் சிறைச்சாலைகளுக்குள் இருந்தே போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகள் வழி நடத்தப்படுகின்றன என புலனாய்வு தகவல் கிடைத்துள்ளன எனவும் ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்திருந்தார்.

அதனால் இதனை கட்டுப் படுத்துவதாக இருந்தால், சிறைச் சாலைகளில் இருந்து வழி நடத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதற்காக போதைப்பொருள் நடவடிக்கைகளில் கைதுசெய்யப் பட்டு மரண தண்டனை தீர்ப்பாக்கப்பட்ட பின்னரும் சிறைச் சாலைக்குள் இருந்துகொண்டு இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படவேண்டுமென ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த தீர்மானத்துக்கு அன்று அமைச்சரவையில் இருந்த யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மரண தண்டனையை நிறைவேற்றும் தீர்மானத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். தற்போது யாரும் மரண தண்டனை தொடர்பாக விமர்சிப்பதாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன், இதுதொடர்பாக வேறுபட்ட கருத்துடையவர்கள் இருக்கலாம். என்றாலும் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப் பட்டால் அதனை பாதுகாத்துக் கொள்வது அமைச்சரவையில் இருக்கும் அனைவரதும் கூட்டுப் பொறுப்பாகும்.

மரண தண்டனையை நிறை வேற்றும் ஜனாதிபதியின் இந்த தீர்மானத்தை விரைவாக நிறை வேற்றுமாறு எழுத்துமூலம் சிலர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர். அதேபோன்று இதனை நிறைவேற்றக் கூடாது என சிலர் தெரிவித்துள்ளனர். என்றாலும் அதிகமானவர்களின் நிலைப் பாடாக இருப்பது மரண தண்டனையை நிறைவேற்றவேண்டும் என்பதாகும்.

அத்துடன் மரண தண்டனையை நிறைவேற்றும் தீர்மானத்துக்கு ஜனாதிபதிக்கு சர்வதேச ரீதியில் அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாக சிலர் தெரிவிக்கின்றனர். இதற்கு ஜனாதிபதி அண்மையில் பதில் அளித்திருந்தார். அதனால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி சர்வதேச அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியமாட்டார். ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இது தொடர்பாக கேள்வி எழுப்பினால் எமது நாட்டின் நிலைமையை தெளிவுபடுத்த முடியும்.

சர்வதேச ரீதியில் 54 நாடுகளில் மரண தண்டனை சட்டம் நிறைவேற்றப்படுகின்றது. 29 நாடுகளில் சட்டம் அமுலில் இருந்தாலும் எமது நாடுபோன்று தண்டனையை நிறைவேற்றுவதில்லை. 105 நாடுகளில் மரண தண்டனைச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டுக்கு அண்மை நாடான இந்தியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றது. நாட்டினதும் நாட்டின் எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியுமே ஜனாதிபதி மரண தண்டனையை நிறைவேற்ற தீர்மானித்திருக்கின்றார் என்றும் அவர் கூறியுள்ளார்.

(கு)

# மொரகஹகந்த திட்டத்தை மஹிந்த பார்வையிட்டார்!



கொழும்பு, ஜூலை 27

மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் இறுதிக் கட்டமான மொரகஹகந்த நீர்த்தேக்கத்துக்கு நீர் நிரப்பும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

மிகவும் பிரம்மாண்டமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு பலரும் வரவேற்பு வெளியிட்டுள்ளமையுடன், இதற்கு பாராட்டுக்களும் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் இந்த நீர்த்தேக்கத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஹெலிகொப்டர் மூலம் வானிலிருந்து பார்த்து ரசித்து நோட்டமிட்டுள்ளார்.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை ஹெலிகொட்டர் மூலமாக சுற்றிபார்த்த மஹிந்த அதனை தமது கையடக்கத் தொலைபேசியில் படமும் பிடித்துக் கொண்டார்.

# சிறிய தந்தையால் துஷ்பிரயோகப்படுத்தப்பட்ட சிறுமி குழந்தையொன்றை பெற்றெடுத்த அவலம்

கொழும்பு, ஜூலை 27

ரன்மினிதென்ன பிரதேசத்தில் வைத்து 42 வயதுடைய நபரொருவர், தனது சகோதரனின் 15 வயது மகளை பாலியல் பலாத்காரம் செய்து அவளை கர்ப்பிணியாக்கியுள்ளார்.

இந்தச் சந்தேகநபர், சுமார் ஒரு வருட காலமாக பொலிஸாரிடம் சிக்காது தலைமறைவாகியிருந்த நிலையில், இமதுவ பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி மொரட்டுவ பிரதேசத்திலுள்ள சிறுவர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் குழந்தை ஒன்றை பெற்றெடுத்துள்ளார்.

சந்தேகநபர் திருமணமானவர் என்றும், பாதிக்கப்பட்ட சிறுமியின் வயதுடைய மகள் ஒருவர் அவருக்கு இருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# 118 இந்திய படகுகள் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 27

நேற்று ஒரே நாளில் தமிழக மீனவர்களுக்கு சொந்தமான 118 விசைப் படகுகளை நீதிமன்றின் உத்தரவுக்கமைய இலங்கை கடற்படையினர் விடுவித்துள்ளனர்.

இதன் பிரகாரம் நேற்றுமுன்தினம் முதல் கட்டமாக 50 படகுகளையும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றம் 98 படகுகளையும் பருத்தித்துறை நீதிமன்றம் 18 படகுகளையும் மல்லாகம் நீதிமன்றம் 2 படகுகளையுமாக மொத்தம் 118 தமிழக மீனவர்களுக்கு சொந்தமான விசைப் படகுகளை விடுவித்துள்ளது.

அத்துடன், இவ்வாறு விடுவிக்கப்பட்ட படகுகள் அனைத்தும் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் படகுகளை விரைவில் தமிழகத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2018 பெப்ரவரி மாதம் வரை இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 174 தமிழக மீனவர்களுக்கு சொந்தமான படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் இதன் ஒரு கட்டமாகவே நேற்று 118 படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டவர் கைது

கொழும்பிலிருந்து மினுவாங்கொடை பிரதேசத்திற்கு போதைப் பொருள் கொண்டு சென்றுவிற்பனைசெய்த இளைஞர் ஒருவரை, மினுவாங்கொடை குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மினுவாங்கொடை பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சம்பத் பெரேரா உள்ளிட்ட பொலிஸ் குழுவினரே இவரைக் கைது செய்துள்ளனர். இந்த நிலையில், இவர் மினுவாங்கொடை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து, இந்த சந்தேக நபரை அடுத்த மாதம் 25 ஆம் திகதி வரை சிறையில் வைக்குமாறு, மினுவாங்கொடை நீதிவான் நீதிபதி சீலனி சத்துரந் தி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

# பணிப் பகிஷ்கரிப்புக்கு தயாராகும் ரயில்வே தொழிற்சங்க அதிகாரிகள்



கொழும்பு, ஜூலை 27

ரயில்வே தொழிற்சங்க அதிகாரிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர் என ரயில்வே சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடாங்கொட தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமது சம்பளப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தருவதற்கு காலதாமதம் ஏற்பட்டு வருகிறது அதை அடுத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், இதற்கு முன்னர் எமது பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத் தருவதாக கூறி அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர் எனினும் இதற்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அரசியல்வாதிகளுக்கு மட்டும் 30 துப்பாக்கிகள்

பாதுகாப்பு அமைச்சினால் கடந்த 2017 ஆம் ஆண்டு மட்டும் அரசியல்வாதிகளுக்கு என 30 துப்பாக்கிகள் புதிதாக விநியோகிக்கப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த ஆண்டில் முதல் காலாண்டில் 14 துப்பாக்கிகளும் இரண்டாம் காலாண்டில் 5 துப்பாக்கிகளும் மூன்றாம் காலாண்டில் 9 துப்பாக்கிகளும் இறுதிக் காலாண்டில் 2 துப்பாக்கிகளும் இவ்வாறு அரசியல்வாதிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எவ்வாறாயினும் கடந்த வருடம் 223 அரசியல்வாதிகளின் துப்பாக்கிகளுக்கான அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதில் 71பேர் மட்டுமே தமது அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இதனை விட கடந்த வருடத்தில் அரசியல்வாதிகளைத் தவிர உயிர், சொத்து பாதுகாப்புக்கு என 0.38 மற்றும் 9 மில்லி மீற்றர் ரக துப்பாக்கிகள் 78 புதிதாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட கடந்த ஆண்டு 1450 வாயு ரைபிள்களும் பாதுகாப்பு அமைச்சால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## வேலணை, ஊர்காவற்றுறை செயலகப் பிரிவில்

# பெண் தலைமைத்துவ குடும்பங்களின் 20 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி





யாழ்ப்பாணம், ஜூலை 27

வடமாகாண மகளிர் விவகார அமைச்சினால் 2018 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதி ஒதுக்கீட்டின் கீழ் வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசசெயலகங்களுக்கு உட்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ் வாதார உதவிப்பொருள்கள் வழங்கும் நிகழ்வுக்கு வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமை தாங்கி தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிப் பொருள்களை வழங்கினார்.

பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில், வேலணை மற்றும் ஊர்காவற்துறை பிரதேச செயலகங்களின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களால் குறித்த பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வேலனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 12 பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கு சிறுகடை வியாபாரம், கோழி வளர்ப்பு, கடல்தொழில், மோர்மிளகாய் உற்பத்தி, விவசாயம் மற்றும் அழகு நிலையம் நடத்துவதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஊர்காவற்றுறை பிரதேச செய லகத்திற்கு உட்பட்ட 08 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கோழி வளர்ப்பு, விவசாயம் மற்றும் வடகம் உற்பத்திக்கான வாழ்வாதார உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன.

வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி. ரூபினி வரதலிங்கம், வேலணை பிரதேச செயலர் சோதிநாதன், கிராம உத்தியோகத்தர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள், அமைச்சு மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர். (இ





வவுனியா பண்டாரிக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் சப்பற திருவிழா நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இரவு ஒன்பது மணியளவில் அம்பாள் அழகிய சப்பறத்தில் பக்தர்கள் கற்பூர சட்டி ஏந்தி வர வெளி வீதியுலா வந்த வேளையில்...

# வவுனியா வடக்கில் வீதிகள் திருத்தம்




வவுனியா வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட உள்ளக வீதிகள் புனரமைக்கும் பணிகள் வவுனியா வடக்கு பிரதேச சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டன. வடக்கு மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தின் வேண்டுகோளிற்கமைவாக வடக்கு மாகாண சபையால் ஒதுக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடைநிதியில் முதற்கட்டமாக மூன்று வீதிகள் திருத்தப்படவுள்ளன. மருதோடை உஞ்சால்கட்டி வீதி, கீரி சுட்டான் வீதி, பனைநின்றான் வீதி என்பனவே திருத்தப்படவுள்ளன. இப் பணிக்காக ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டள்ளமை குறிப்பிடத்தக்கது

நேற்றுமுன்தினம் மருதோடையில் நடைபெற்ற வீதி திருத்த ஆரம்ப நிகழ்வில் வ.மா.ச உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், மா.ச.உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் ச.தணிகாசலம் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.




இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தமிழ் நாடு கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே.ஏ. முகம்மது அபூபக்கர் யாழ். மஸ்ஜித் முஹம்மதியாவுக்கு வருகை தந்து யாழ். முஸ்லிம்களின் தற்போதைய சமூக வாழ்வின் நிலைமைகள் பற்றியும், சமய விடயங்கள், கலாசார பண்பாடுகள் போன்றவை குறித்தும் கலந்துரையாடினார்.

இந் நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாககிகள், சமூக பெரியார்கள் கலந்து கொண்டனர். (இ-19)

படம் - எம்.எல்.லாபிர்.

# கிழக்கில் நடந்தது போன்று

# வவுனியாவிலும் திட்டமிட்ட வகையில் பெரும்பான்மையின குடியேற்றங்கள்

## ஜனாதிபதியுடன் பேசி தடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு மா.சபை உறுப்பினர் சத்தியலிங்கம் கடிதம்

யுத்தகாலத்திலும், யுத்தத்திற்கு பின்னரானகாலத்திலும்வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலானது மாற்றமடைந்து வருகின்றது. இந்த நடவடிக்கை தொடருமானால் திருகோணமலை, அம்பாறை மாவட்டத்தின் நிலைதான் வவுனியாவிற்கும் ஏற்படுமென வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.



இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவரும் த.தே.கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா.சம்பந்தனுக்கு அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

**வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவு**

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மகாவலி எல் வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கடந்த ஆட்சியில் நன்கு திட்டமிட்ட வகையில் பெரும்பாண்மையினக் குடியேற்றங்கள் நடந்தேறியுள்ளன.

| கி.சே.பிரிவு | கிராமம் | வாக்காளர் என்ணிக்கை |
|---|---|---|
| வெடிவைத்தகல்லு | வெகரதென்ன | 25 |
| பதவியபடிவம்-1 (கம்பிலிவெள) | | 94 |
| போகஸ்வெள-1 | | 495 |
| போகஸ்வெள-2 | | 137 |
| கஜபாபுர | கஜபாபுர | 111 |
| மொனரவெள | | 186 |
| மாயாவெள | | 213 |
| கல்யானபுர | கல்யானபுர-1 | 355 |
| | நாமல்புர | 75 |
| சதாஹறித்தகிராமம் | | 01 |
| எத்தாவெட்டுனுவெள | எத்தாவெட்டுனுவெள | 747 |
| நிக்கவெளஇடது | சம்பத்கம | 116 |
| | றணவிருகம | 62 |
| நிக்கவெளஇடது (இசுறுபுர) | | 07 |
| நிக்கவெளஇடது (சங்கபோபுர) | | 00 |
| நிக்கவெளஇடது | | 365 |
| நிக்கவெளவலது | நிக்கவெளவலது | 598 |
| | சப்புமல்தன்ன | 315 |

வவுனியா வடக்கில் மொத்தமாக இதுவரையில் 4083 வாக்காளர்களை உள்ளடக்கியதாக குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

அத்துடன் நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள கச்சல்மகிளங்குளம் எனப்படும் கைவிடப்பட்ட குளம் கடந்த வருடம் அனுராதபுரம் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு குளத்திற்கு கீழான காணப்படும் நீர்ப்பாசனக் காணிகள் குடியேற்றவாசிகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. இக்குளத்திற்கு மிகவும் அண்மையிலுள்ள கொக்கச்சாங்குளம் என அழைக்கப்பட்ட தமிழர்களின் பூர்வீக காணிகள் கலா போகஸ்வ என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டு வேறு மாவட்டங்களில் இருந்து சிங்கள மக்கள் குடியேற்றப் பட்டிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**வவுனியா பிரதேச செயலகப் பிரிவு**

வவுனியா பிரதேச செயலகப் பிரிவிலும் திட்டமிட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன. மருதங்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ளகிராமங்களில்1005வாக்காளர் உள்ளடங்கலாகக்குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

| கி.சே.பிரிவு | கிராமம் | வாக்காளர் என்ணிக்கை |
|---|---|---|
| மருதங்குளம் | நாமல்கம | 194 |
| | சலலிகினிகம | 264 |
| | நந்தமித்திரகம | 547 |
| மொத்தம் | | 1005 |

**செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவு**

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் பாவகளம் கிராம அலுவலர் பிரிவில் 151குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. செட்டிகுளம் பி.செ. பிரிவுக்குட்பட்ட கிராமமாக இருந்தபோதும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுக்கு உள்வாங்கப்பட்டு அவர்களால் 151 குடும்பங்களுக்கு காணி வழங்குவதற்காக BODதயாரிக்கப்பட்டது. அத்துடன் 100 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது 40 குடும்பங்கள் மட்டுமே வசித்துவருகின்றார்கள். இவர்கள் அனைவரும் அனுராதபுரம் மாவட்டத்தில் வதியும் இராணுவக் குடும்பங்களாகும்.

இதேபோன்று மாணிக்கம் பண்ணை (மெனிக்பாம்) பகுதியில் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்களை தற்காலிகமாக தங்கவைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட இடைத்தங்கல் முகாம் அமைந்த 1089 ஏக்கர்

| கி.சே.பிரிவு | கிராமம் | வாக்காளர் என்ணிக்கை |
|---|---|---|
| பாவற்குளம் | பாவற்குளம் | 151 குடும்பம் |

காணியும் தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த காணி அரச காணியென்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் நீண்டகாலமாக செட்டிகுளம் பிரதேச மக்களால் பருவகாலப் பயிர்ச் செய்கை காக பயன்படுத் தப்பட்டதாகும். எனினும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்களுக்கான காணி அனுமதிப்பத் திரங்கள் வழங்கப்படவில்லை.



இடைத்தங்கல் முகாமாகபயன்படுத்தப்பட்டபோது அனைத்து உட்கட்டுமான வசதிகளும் இப்பகுதியில் செய்யப்பட்டிருந்தன. (உள்ளகவீதிகள்,மின்னிணைப்பு, கிணறுகள்) தற்போது இக் காணியின் ஒருபகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினரால் விலங்கு பண்ணை, விவசாய பண்ணைகள் நடத்தப்பட்டு வருவதுடன், இராணுவத்தினரால் உல்லாச விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்காணியில் பெருந் தொகையான சிங்களக் குடியேற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என அறிய முடிகின்றது. இதற்கு மேலதிகமாக 146 ஏக்கர் பொதுமக்களுடைய காணிகள் அரச படைகளின் பயன்பாட்டுக்காக கையகப்படுத்தப்பட்டுள்ளன.

மல்வத்து ஓயா (கீழ்மல்வத்து ஓயா நீர்த் தேக்க திட்டம்) இத்திட்டமானது அனுராதபுரம் – வவுனியா மாவட்டங்களினூடாக ஊடறுத்துபாயும் அருவியாற்றை மறித்து தந்திரிமலை பிரதேசத்தில் அணைக்கட்டொன்றை அமைப்பதினூடாக உருவாக்கப்படவுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அனுராதபுர மாவட்டத்தின் மதவாச்சி பிரதேச செயலக பிரிவி லுள்ள ஒரு பகுதி காணிகளும், வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிலுள்ள சின்னசிப் பிக்குளம் கி.சே.பிரிவிலுள்ள 1430 ஹெக்ரேயர் காணியும் சுவீகரிக்கப்படவுள்ளன. அத்துடன் 05 சிறிய குளங்களும் மேட்டுக்காணி 11ஏக்கர், வயற் காணி 625.75 ஏக்கரும் உள்ளடக்கப்படுகின்றன.

இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாற்றுக் காணியாக முதலியார்குளம் கி.சே.பிரிவில் கப்பாச்சி கிராமத்தில் 1000 ஏக்கர் காணி ஒதுக்கித் தருமாறு கீழ்மல்வத்து ஓயா திட்ட பணிப்பாளரால் பிரதேச செயலாளருக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 11 ஏக்கர் மேட்டுக்காணியும், 625.75 ஏக்கர் வயற்காணியுமாக மொத்தமாக 636.75 ஏக்கர் சுவீகரிக்கப்படவுள்ள நிலையில் மாற்றுக் காணி வழங்குவ தற்காக 1000 ஏக்கர் காணி பிரதேச செயலாளரிடம் கோருவதன் நோக்கம் தான் என்ன?

அத்துடன் இது வரையில் இத்திட்டம் தொடர்பான விடயங்கள் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் கலந்துரையாடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசி திட்டமிட்ட வகையில் நடைபெறும் இனப் பரம்பலை பாதிக்கும் செயலைத் தடுத்து நிறுத்த ஆவன செய்யுமாறு தங்களை தயவாக கேட்டுக் கொள்கின்றேன் என்று அந்தக் கடிதத்தில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ✻





# கல்விக் கதிர் வெளியீடு

## 6 வித்தியாசங்கள் கண்டுபிடியுங்கள்





## பேராசையால் இறந்த கொக்கு



வசந்த புரம் என்றொரு ஊர் இருந்தது. அழகிய வனாந்தரமும் நீர் நிலைகளும் இருக்கும் அந்த ஊரில் ஒரு பெரிய குளம் இருந்தது.

அதில் ஒரு கொக்கு தினசரி மீன் பிடித்து உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தது. தினசரி அதிக நேரம் காத்திருந்து மீனைப் போராடிப் பிடிப்பதால் கொக்கு சலிப்புற்றிருந்தது.

ஒரு நாள் கொக்கின் மூளையில் ஒரு யோசனை தோன்றியது. இந்த மீன்களை அவைகளின் சம்மதத்தோடே நாம் விரும்பிய இடத்தில் கொண்டு போய் தின்றால் எப்படி இருக்கும் என்று யோசித்தது. அதற்கு ஒரு வஞ்சகமான திட்டமும் தயாரித்தது.

ஒரு நாள் கொக்கு வருத்தமுடன் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது. துள்ளிக் கொண்டிருந்த மீன்களில் ஒன்றுக்கு சந்தேகம் வந்தது. கொக்கு நம்மைப் பார்த்தவுடன் கவ்விக் கொள்ளுமே. சும்மாவிடாதே, ஆனால் இது செயலற்று நிற்கின்றதே என்னவாக இருக்கும் என்று, யோசித்தவாறே அதன் முன் வந்தது.

என்ன கொக்காரே! உன் ஆகாரத்தைக் கொத்தாமல் சும்மா நிற்கிறீர்? என்றது. அதற்கு கொக்கு கூறிற்று நான் மீனைகொத்தித் தின்பவன்தான், ஆனாலும் இன்று எனக்கு மனசு சரியில்லை என்றது.

மனசு சரியில்லையா ஏன்? என்றது மீன்.

‘அதையேன் கேட்கிறாய்.. என்று அலட்டியது கொக்கு.

பரவாயில்லை சொல்லுங்களேன்’ என்றது மீன். சொன்னால் உனக்கு அதிர்ச்சியாக இருக்கும் என்றது மீன்.

மீனுக்குப் பரபரத்தது. சொன்னால்தான் தெரியும் என்றது.

வற்புறுத்திக் கேட்பதால் சொல்கிறேன். இப்போது ஒரு மீனவன் இங்கே வரப் போகிறான், என்று இழுத்தது கொக்கு.

வரட்டுமே என்றது மீன்.. என்ன வரட்டுமே? உங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பிடித்துச் சென்றுவிடப் போகிறான் என்றது கொக்கு.

இதைக் கேட்ட மீன்கள் அனைத்தும் அதிர்ச்சியடைந்தன. அவை தங்களைக் காப்பாற்றுமாறு கொக்கிடமே வேண்டின.

ஆனால் கொக்கு நான் என்ன செய்வேன்? என்னால் மீனவனோடு சண்டை போட முடியாது. கிழவன் நான், வேண்டுமானால் உங்களை இக்குளத்திலிருந்து வேறொரு குளத்துக்குக் கொண்டு போகிறேன். அதனால் எனக்கும் நல்ல பெயர் வரும். நீங்களும் பிழைத்திருப்பீர்கள், என்றது மிகவும் இறக்கம் கசிய.

மீன்கள் எல்லாம் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அதன் பேச்சை நம்பின.

எங்கள் உயிரைக் காக்க நீங்களே உதவி செய்கிறேன் என்கிறீர்கள். அதன் படியே செய்யுங்கள், என்றன மீன்கள் எல்லாம் ஒருமித்த குரலில்.

கொக்குக்குக் கசக்குமா காரியம்?. நடைக்கு ஒவ்வொன்றாக குலத்திலிருக்கின்ற மீன்களையெல்லாம் கௌவிக் கொண்டுபோய் சில மீன்களைத் தின்று, மற்ற மீன்களை ஒரு பாறையில் உலரவைத்தது. குளத்திலிருந்த நண்டு ஒன்று இதைப் பார்த்துக் கொண்டே இருந்தது. அதற்கும் வேறு குளத்திற்குச் செல்ல உள்ளுக்குள் ஆசை சுரந்தது.

அந்த நண்டு கொக்கிடம் வந்து வயோதிகக் கொக்கே! இந்த மீன்களையெல்லாம் எங்கே கொண்டு போகிறீர்களோ அங்கேயே என்னையும் கொண்டு போங்கள், என்னையும் மீனவனிடமிருந்து காப்பாற்றுங்கள், என்று கெஞ்சியது. நண்டு கெஞ்சுவதைப் பார்த்த கொக்கு அதன் மேல் இறக்கப்பட்டு நண்டையும் கௌவிக் கொண்டு பறந்தது.

பறக்கும் போது வழியில் மீன்களின் முள்ளுடல்கள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதைக் கண்டது நண்டு.

அதைப் பார்த்த நண்டுக்கு ஒரே அதிர்ச்சி.

வேறு நீர்நிலைக்குக் கொண்டுச் செல்வதாகக் கூறி மீன்களைத் தின்றுவிடும் கொக்கின் வஞ்சகம் நண்டுக்குச் சட்டென்று புரிந்துவிட்டது. தன் நிலையும் அப்படித்தானா? என்று நண்டு பயப்படத் துவங்கியது.

உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நண்டுக்கு ஓர் உபாயம் தோன்றியது. வைரத்தை வைரத்தால் அறுப்பது போல் அதற்கு மூளை வேலை செய்தது. கொக்காரே! நீங்கள் என்மேல் இரக்கப்பட்டு எடுத்துக்கொண்டு வந்தீர்கள். ஆனால் அங்கே என் உறவினர்கள் பலர் வரப்போகும் ஆபத்து தெரியாமல் இருப்பதால், என்னை மீண்டும் அங்கே கொண்டு சென்றால் அவர்களிடம் விஷயத்தைச் சொல்லி அவர்களையும் உங்களுடன் வரத் தயார் செய்வேன் என்றது நண்டு.

கொக்குக்கு ஒரே சந்தோஷம். இன்னும் நிறைய நண்டுகள் கிடைக்கப் போவதை நினைத்து மகிழ்ச்சி அடைந்து. அப்படியா, இன்னும் இருக்கின்றனவா நண்டுகள்?. என்று கேட்டுக் கொண்டே பழைய குளத்திற்கு மீண்டும் நண்டைக் கொண்டு போனது. குளத்துக்கு நேராக வரும்போதும் அதுவரை அமைதியாக இருந்த நண்டு தன் கொடுக்கினால் கொக்கின் கழுத்தை இரண்டு துண்டாக்கிவிட்டுக் குளத்து நீரில் வீழ்ந்து உயிர் பிழைத்துக் கொண்டது.

குளத்தில் மிச்சம் இருந்த மீன்கள் பிழைத்துக் கொண்டன.

**பாடம்:** மீனைத் தின்பது தான் கொக்கின் குணமே என்னும் போது, கொக்கு மீன்களைக் காப்பதாகச் சொன்னதை மீன்கள் நம்பியிருக்கக் கூடாது. வாஞ்சக மனத்தான் உதவி செய்தாலும் அது அபாயத்தில் முடியும் ஆபத்துண்டு. எனவே ஒருவரை நம்பும் முன்பாக அவரது இயல்பான குணத்தை நன்கறிந்தே நம்புதல் வேண்டும் என்ற கதையை மந்திரியார் இளவரசர்களுக்கு எடுத்துச் சொன்னார்.




## புள்ளிகளை இணையுங்கள்!



### அம்மா!!

*என்னை பத்து மாதம் சுமந்த அம்மாவே!*
*எனக்குப் பாசத்தை சோறாக ஊட்டிய*
*அம்மாவே!*
*உன் மடியில் கிடத்தித் தாலாட்டிய*
*அம்மாவே!*
*எனக்கு அ , ஆ எழுத்துச் சொல்லித்*
*தந்த அம்மாவே!*
*எனக்குக் காய்ச்சல் என்றால் அன்புடன்*
*பார்த்துக் கொள்ளும் அம்மாவே!*
*தியாகம் செய்யும் அம்மாவே!*
*கடவுள் எனக்குக் கொடுத்த வரம்*
*அம்மா!*
*நாம் அனைவரும் அவரைப் போற்றுவோம்!*
*அம்மாவை நேசிப்போம்!*



## நிறம் தீட்டுங்கள்!



# அனுமதியளிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலை எவரும் தடுக்க முடியாது: டக்ளஸ் எம்.பி.



சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும். அதேவேளை, சட்ட ரீதியான கடற்றொழிலை எவரும் தடுக்க முடியாது. அத்துமீறும் அரசியல் தலையீடுகளே கடற்றொழிலை நம்பிவாழும் மக்களின் வாழ்வாதாரத்தின் பாதிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்திற்கு நேற்று சென்ற முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சம்மேளனங்களின் (சுருக்குவலைப் பிரிவு) உப தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக டக்ளஸ் எம்.பி. கருத்து தெரிவிக்கையில் –

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளும், பிறமாவட்டத்து மீனவர்களின் அத்துமீறல்களும் அதிகரித்துள்ளமையால், கடற்றொழிலை வாழ்வாதாரமாக நம்பிவாழும் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் என அந்த மக்கள் எனது கவனத்திற்கு அறியத்தந்துள்ளனர்.

அவ்விடயம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீன்பிடித்துறை அமைச்சராக இருந்தவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, அவற்றைத் தடுத்து நிறுத்த தொடர்ந்தும் போராடி வருகின்றேன்.

இதற்கிடையே சில உள்ளூர் அரசியல் பிரமுகர்களின் அத்துமீறிய தலையீடுகளாலும், பாரபட்சமான பொருத்தமற்ற நடவடிக்கைகளாலும் சட்ட ரீதியான அனுமதியளிக்கப்பட்ட கடற்றொழிலில் ஈடுபட்டவர்களும் தமது தொழிலை செய்ய முடியாமல் பாதிக்கப்படுகிறோம் என தெரிவித்தனர்.

இந்த நிலையில் மீன்பிடித்துறை அமைச்சர் விஜித் விஜித்த முனி சொய்சாவுடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு சுருக்குவலைத் தொழில் செய்வோர் தொழிலில் ஈடுபடவிடாது தடுக்கப்படுகின்றமை தொடர்பாக எடுத்துரைத்தேன்.

அனுமதி பெற்றுள்ள சுருக்குவலைத் தொழிலாளிகள் எவ்வித இடையூறும் இல்லாமல் தமது தொழிலை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மீன்பிடித்துறை அமைச்சர், இவ்விடயத்திற்கு விரைவில் தீர்வொன்றைப் பெற்றுத் தருவேன் என்று தெரிவித்தார். இதனை முல்லைத்தீவு மாவட்ட சம்மேளனத்தின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தேன் என்றும் டக்ளஸ் எம்.பி. தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட சம்மேளன உறுப்பினர்கள், முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் சட்டவிரோத மீன்பிடிப்பாளர்களாலும், அரசியல் தலையீடுகளாலும், சட்ட ரீதியாக சுருக்குவலை மீன்பிடியில் ஈடுபடும் தாம் பாதிக்கப்பட்டுள்ளோம் என்றும் தமது தொழிலை தொடர்ந்து செய்வதற்கு அனுமதியைப் பெற்றுத் தருமாறும் டக்ளஸ் எம்.பியிடம் கோரிக்கை விடுத்தனர்.

# தொண்டராசிரியர் விவகாரம் இம்மாதத்துடன் முடிவுக்கு வரும்



கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

தொண்டராசிரியர்களின் மேன்முறையீடுகள் அனைத்தும் ஒகஸ்ட் மாதத்துடன் நிறைவடையும் என கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தொண்டராசிரியர் தெரிவின்போது தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்றும் நிரந்தர நியமனத்தை பெற்று தருமாறும் பாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் நேற்று முன்தினம் கிழக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஆளுநரின் மக்கள் சந்திப்பின்போது கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இக்கோரிக்கையை நான் வரவேற்கிறேன். இதுவரை காலமும் ஒரு தடவைக்கு பதிலாக பல தடவைகள் தொண்டராசிரியர்களின் முறைப்பாடுகளையும், பிரச்சினைகளையும் ஏற்றுக்கொண்டு மேன்முறையீடு செய்தேன்.

ஆனாலும் ஒகஸ்ட் மாதத்துடன் தொண்டராசிரியர்களின் அனைத்து மேன்முறையீடுகளும் நிறைவடையும். தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர்களின் பெயர் விவரங்களை வெளியிட உள்ளேன்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் யுத்த காலப்பகுதியில் ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் எவ்வித கொடுப்பனவுகளும் இன்றி கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த தொண்டராசிரியர்களை நான் பாராட்டுகிறேன். நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனையடுத்து கிழக்கு மாகாணத்தில் கல்வி அமைச்சால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து தொண்டராசிரியர்களுக்கும் மிக விரைவில் நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும் ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

# தங்க கட்டிகளுடன் இந்தியர் மூவர் கைது

சட்டவிரோதமான முறையில் ஒரு தொகை தங்கத்தை எடுத்து வந்த இந்தியர்கள் மூவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள் மூவரும் சென்னையில் இருந்து இலங்கை வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் பாதங்களில் ஒட்டப்பட்டிருந்த 6 தங்க கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்க கட்டிகள் சுமார் 3 கோடி ரூபா பெறுமதியுடையவை என சுங்க ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட மூவரும் இந்தியாவின் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை 5 கிலோவிற்கும் அதிகமான தங்கத்துடன் கைது செய்யப்பட்ட டுபாயில் இருந்து வந்த இலங்கைப் பெண் ஒருவருக்கு 25 லட்சம் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை இந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து மூன்று கோடியே 6 லட்சத்து 93 ஆயிரம் பெறுமதியான தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டிருந்தன.

வெல்லம்பிட்டி பகுதியை சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் இந்த தங்கக் கட்டிகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

# லண்டன் செல்ல விமானம் ஏறிய தம்மாலோக தேரர் இறக்கி விடப்பட்டார்



லண்டன் செல்வதற்காக விமானத்தில் ஏறிய வண.உடுவே தம்மாலோக தேரர் கட்டுநாயக்க விமான நிலையத் தில் வைத்து விமானத்தில் இருந்து இறக்கி விடப்பட்டுள்ளார்.

வெளிநாடு செல்வதற்கு நீதிமன்ற தீர்ப்பில் வழங்கப்பட்ட திகதி பற்றிய சர்ச்சை காரணமாகவே அவர் இவ்வாறு விமானத்தில் இருந்து இறக்கி விடப்பட்டுள்ளார்.

லண்டனில் இவ்வார இறுதியில் நடைபெற உள்ள சொற்பொழிவு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு செல்வதற்காக தம்மாலேக தேரர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளார்.

இதன்போது வெளிநாடு செல்ல அனுமதி இல்லை என விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தமையை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பின்னர் அவர் விமானத்தில் ஏற்றப்பட்டுள்ளார்.

பின்னர் விமானம் செல்வதற்கு சிறிது நேரம் இருந்த போது மீண்டும் நீதிமன்ற தீர்ப்பில் வழங்கப்பட்ட திகதி பற்றிய சர்ச்சை இருப்பதாக தெரிவித்து அவர் மீண்டும் விமானத் தில் இருந்து இறக்கி விடப்பட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு இன்னும் ஓரிரு நாள்களில் தீர்வு கண்டு பின்னர் வெளிநாடு செல்ல எதிர்பார்க்கிறேன் என்றும் பொறுமையாக இதனை தாங்கிக்கொள்ளும் சக்தி இருக்கிறது என்றும் தேரர் தெரிவித்துள்ளார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் 'இ - கார்ட்' (E-Card ) முறைமை

கொழும்பு, ஜூலை 27

பயணிகளுக்கு ஏற்படும் தாமதத்தை தவிர்ப்பதற்காக 'இ – கார்ட்' முறை அமுல்படுத்தப்படவிருக்கிறது என போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் மற்றும் குடியகல்வு குடிவரவு அமைச்சின் அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று நியமிக்கப்படவிருக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான சேவைகள் அதிகாரசபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

இதற்கென விமான நிலையத்தில் அமைக்கப்படும் இ – கேட்டைப் பயன்படுத்தி விமான நிலைத்திற்குள் பிரவேசிக்க முடியும், விமான நிலையத்தில் இருந்து துரிதமாக வெளியேறவும் முடியும்.

உள்நாட்டு விமானப் பயணங்களை ஆரம்பிக்கத் தேவையான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன. நேபாளத்தைப் போன்று வளர்ச்சி கண்ட உள்நாட்டு விமானசேவையை ஆரம்பிப்பது இலக்காகும்.

இதற்கான வசதிகளும், ஒடுபாதைகளும் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. மட்டக்களப்பு, சிகிரிய போன்ற பிரதேசங்களுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து விமானசேவை ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இ – பாஸ்போர்ட் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென விசேட குழுவும் அமைக்கப்பட இருக்கிறது. இதில் ஏற்பட்ட தாமதித்தினால் இந்த இ – கார்ட், முறைமை அறிமுகப்படுத்தப்படுகிறது என்றும் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் தேர்தலில் இம்ரான்கான் கட்சி அதிக இடங்களில் முன்னிலை

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் கிரிக்கெட் அணி தலைவர் இம்ரான்கானின் தெஹ்ரிக் – இ – இன்சாப் கட்சி அதிக இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. இதே வேளை, முடிவை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் 270 நாடாளுமன்ற தொகுதிகள் மற்றும் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், கைபர் பக்துன்வா ஆகிய 4 மாகாண சட்டசபைகளுக்கும் சேர்த்து நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றது.

மாலை 6 மணிக்கு வாக்குப் பதிவு முடிந்து வாக்கு எண்ணும் பணி தொடங்கியது. தொடக்கத்தில் இருந்தே இம்ரான் கானின் தெஹ்ரீக் இ –இன்சாப் கட்சி முன்னிலை வகித்து வந்தது.

அடுத்த இடங்களில் நவாஸ் ஷெரீப்பின்பாகிஸ்தான்முஸ்லிம் லீக் கட்சியும், பெனாசிர் பூட்டோ மகன் பிலாவல் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் உள்ளன.

272 நாடாளுமன்ற தொகுதிகளை கொண்ட பாகிஸ்தானில், பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடிக்க 137 தொகுதிகளில் வென்றாக வேண்டும் என்ற நிலையில், 114 தொகுதிகளில் தெஹ்ரிக் – இ– இன்சாப் கட்சியும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் 57 இடங்களிலும், பிலாவல் பூட்டோவின் கட்சி 36 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

முடிவை அறிவிப்பதில் தாமதம்



இதற்கிடையே, வாக்கு எண்ணிக்கையில் முறைகேடுகள் நடந்துள்ளமையால் இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்கப்போவதில்லை என்றும், தேர்தல் முடிவுகளை எதிர்த்து பல கட்சிகளுடன் சேர்ந்து போராட்டம் நடத்த உள்ளன என நவாஸ் ரீப் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து தேர்தல் அதிகாரிகள் கூறுகையில் –

தேர்தலில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை. இம்ரான்கான் கட்சி அதிக இடங்களைப் பிடித்துள்ளது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக முடிவுகளை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

1996 இல் கட்சி தொடங்கிய இம்ரான்கான் இதுவரை பொது தேர்தல்களில் பெரியளவில் வெற்றி பெறவில்லை. எனவே, தற்போது கிடைத்துள்ள வெற்றியை அந்தக் கட்சியினர் பட்டாசு வெடித்து கொண்டாடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மியன்மார் சுரங்கத்தில் நிலச்சரிவு; 27 பேர் பலி?





மியன்மார் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவால் 27 தொழிலாளர்கள் மண்ணோடு மண்ணாக புதைந்து விட்ட பரிதாப சம்பவம் தொழிலாளர் கள் மத்தியில் மிகுந்த துயரத்தை ஏற்படுத்தி உள்ளது.

மியன்மார் நாட்டின் வட பகுதியில் அமைந்து உள்ள காசின் மாகாணத்தில் நிறைய சுரங்கங்கள் உள்ளன. அந்த சுரங்கங்கள்தான் சுமார் 70 ஆயிரம் ‘ரவாங்’ கிறிஸ்தவ இன தொழிலாளர்களின் வாழ்வாதாரமாக உள்ளன.

இந்த நிலையில் அங்கு செட் மூ என்ற இடத்தில் உள்ள மாணிக்க கல் சுரங்கத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தொழிலாளர்கள் மாணிக்க கற்களை வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது பெய்த மழையால் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் சுரங்கத்தில் மாணிக்க கற்களை வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டு இருந்த 27 தொழிலாளர்கள் மண்ணோடு மண்ணாக புதைந்து விட்டனர். அங்கு தொடர்ந்து மழை பெய்து வருவதால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டு உள்ளது என தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த பரிதாப சம்பவம் குறித்து உள்ளூர் பொலிஸ் அதிகாரி ஜின் கியாவ் நேற்று முன்தினம் கூறும்போது இன்னும் ஒருவரது உடலைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. செஞ்சிலுவை சங்கத்தினர், தீயணைப்புப் படையினரின் துணையுடன் மீண்டும் மீட்புப்பணிகளைத் தொடங்க உள்ளோம்.- என்றார்.

## சிரியாவில் ஐ.எஸ். அமைப்பு மூர்க்கம்; அடுத்தடுத்து தற்கொலை தாக்குதல்கள்

பெய்ரூட், ஜூலை 27

சிரியாவின் தெற்கு பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தொடர் தற்கொலை குண்டு தாக்குதல்களில் அப்பாவி பொதுமக்கள் உட்பட 200 இற்கு மேற்பட்டோர் பரிதாபமாக உடல் சிதறி பலியாகினர்.

சிரியாவில் பல்வேறு கிளர்ச்சியாளர்களுக்கும், அரசு படைகளுக்கும் இடையே கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா ஆதரவாக இருந்து வருகிறது. அதே நேரத்தில் சிரியா அரசுக்கு ரஷ்யா மற்றும் ஈரான் நாடுகள் ஆதரவாக உள்ளன. சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பல்வேறு பகுதிகளை அரசு படையினர் மீட்டு வருகின்றனர்.



220 பேர் வரை சாவு

இதற்கிடையே, உள்நாட்டுப் போரால் பெரும் சேதத்தைச் சந்தித்துள்ள சிரியா நாட்டில் நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தினர். இதில், 32 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என முதல் கட்டமாக தகவல் வெளியானது.

இந்தநிலையில், சிரியாவின் தெற்கு பகுதியில் உள்ள ஸ்வேடியா நகரில் தற்கொலைப்படையை சேர்ந்த 3 பேர் தொடர் தாக்குதல் நடத்தினர். அப்பகுதிக்கு வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளிலும் இதே போல் பயங்கரவாதிகள் தொடர் தாக்குதலை நடத்தினர்.

இந்த தாக்குதல்களில் சுமார் 127 பொதுமக்கள் உட்பட 221 பேர் பரிதாபமாதாக பலியாகினர் என சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த தொடர் தற்கொலைப்படை தாக்குதல் சம்பவங்களுக்கு ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

(க)

### சொத்துகள் முடக்கம் விவகாரம்:

## மேல்முறையீடு செய்வதற்கு மல்லையாவுக்கு அனுமதி மறுப்பு



லண்டன், ஜூலை 27

சொத்துகளை முடக்கம் செய்வது குறித்து இங்கிலாந்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் விஜய் மல்லையா தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் அவருக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

இந்தியாவில் உள்ள வங்கிகளில் 9 ஆயிரம் கோடி இந்திய ரூபா கடன் வாங்கிவிட்டு திருப்பிச் செலுத்தாமல் இங்கிலாந்துக்கு தப்பிச் சென்று, லண்டன் அருகே உள்ள ஹெர்ட் போர்ட்ஷைர் என்ற இடத்தில் வசிக்கும் தொழில் அதிபர் விஜய் மல்லையாவை இந்தியாவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய அரசின் சார்பில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த லண்டனில் உள்ள இங்கிலாந்து நீதிமன்றம் , அந்த நாட்டில் உள்ள மல்லையாவின் சொத்துகளை முடக்க கடந்த மே மாதம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய அனுமதி வழங்கக் கோரி இங்கிலாந்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மல்லையா மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவை விசாரித்த நீதிபதி, மேல்முறையீடு செய்ய அவருக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டார்.

## தேர்தல் முடிவுகளை ஏற்கத் தயாரில்லை

### நவாஸ் ஷெரீப் கட்சி கூறுகிறது

இஸ்லாமாபாத், ஜூலை 27

பாகிஸ்தானில் நடைபெற்ற நாடாளுமன்றத்தின் தேர்தல் முடிவுகளை ஏற்கப் போவதில்லை என முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கட்சி தலைவர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் 270 நாடாளுமன்ற தொகுதிகள் மற்றும் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், கைபர் பக்துக்வா ஆகிய 4 மாகாண சட்டசபைகளுக்கும் சேர்த்து நேற்று முன்தினம் தேர்தல் நடந்தது. மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்த நிலையில் வாக்குகள் எண்ணும் பணி தொடங்கியது.


தொடக்கத்தில் இருந்தே இம்ரான்கானின் தெஹ்ரீக் இ – இன்சாப் கட்சியின் வேட்பாளர்கள் முன்னிலை பெற்று வந்தனர். அடுத்த இடத்தில், நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி உள்ளது.

இந்தநிலையில், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் தேர்தல் முடிவுகளை ஏற்கப் போவதில்லை என முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கட்சி தலைவர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில் – வாக்குகளை எண்ணும் பணியில் ஏகப்பட்ட முறைகேடுகள் நடந்துள்ளன. அதனால் தான் இம்ரான்கான் கட்சி வெற்றி பெறுவது போன்ற செய்திகள் வெளியிடப்படுகின்றன. நாங்கள் இந்த தேர்தல் முடிவை ஏற்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழக முதலமைச்சர் யார்?

## 'தந்தி ரிவி' கருத்துக் கணிப்பில் ஸ்டாலினுக்கு அதிக ஆதரவு




தமிழகத்தில் அடுத்து யார் முதலமைச்சராக வரவேண்டும்? என்று தந்தி ரிவி நடத்திய கருத்துக்கணிப்பில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு அதிக ஆதரவு கிடைத்துள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தந்தி ரிவி. நடத்திய பிரமாண்ட கருத்துக் கணிப்பு முடிவுகள் வெளியாகி உள்ளன. அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் நடத்தப்பட்ட இந்த கருத்துக் கணிப்பு முடிவுகள் தந்தி ரிவியில் இரவு 9 மணிக்கு ஒளிபரப்பாகும் மக்கள் யார் பக்கம் நிகழ்ச்சியில் வெளியாகி வருகிறது.

தமிழகத்தில் அடுத்து யார் முதலமைச்சராக வரவேண்டும்? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு மு.க.ஸ்டாலினுக்கு 51 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஈ.பி.எஸ். – ஓ.பி.எஸ். ஆகியோருக்கு 25 சதவீத மக்களும், டி.டி.வி. தினகரன், ரஜனி ஆகியோருக்கு தலா 6 சதவீத மக்களும், கமலுக்கு 5 சதவீத மக்களும், அன்புமணிக்கு 4 சதவீத மக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். மற்றவர்களுக்கு 3 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மோடி அரசின் கீழ் தமிழகம் பலன் பெற்றதா? என்ற கேள்விக்கு, ஆம் என 8 சதவீதம் மக்களே கருத்து தெரிவித்துள்ளனர். பாதியளவு பலன் பெற்றதாக 23 சதவீத மக்களும், பலன் பெறவில்லை என 61 சதவீத மக்களும் கருத்து தெரிவித்துள்ளனர். 8 சதவீத மக்கள் கருத்து தெரிவிக்கவில்லை.

இதேபோல் காவிரி ஆணையம் அமைய காரணம் குறித்த கேள்விக்கு மத்திய அரசுதான் என 14 சதவீத மக்கள் மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த கேள்விக்கு உச்ச நீதிமன்றத்திற்கு அதிக ஆதரவை அளித்துள்ளனர். 41 சதவீத மக்கள் உச்ச நீதிமன்றத்தால் காவிரி ஆணையம் அமைந்ததாக கூறியுள்ளனர். அ.தி.மு.க. காரணம் என 21 சதவீத மக்களும், எதிர்க்கட்சி காரணம் என 24 சதவீத மக்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகம் பலன் பெற்றதா? என்ற கேள்விக்கு அருமை என 10 சதவீத மக்களும், நன்று என 11 சதவீத மக்களும், சாரசரி என்று 28 சதவீத மக்களும், சரியில்லை என 35 சதவீத மக்களும், மோசம் என 16 சதவீத மக்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

2016 இல் கொடுத்த வாக்குறுதிகளை அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி உள்ளதா..? என்ற கேள்விக்கு ஆம் என 11 சதவீதம் பேரும், ஓரளவு என 28 சதவீதம் பேரும், இல்லை என 61 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

# 18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்க வழக்கு: 3 ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைப்பு

எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்க வழக்கின் விசாரணையை ஒகஸ்ட் 3 ஆம் திகதிக்கு தள்ளிவைத்து 3 ஆவது நீதிபதி சத்தியநாராயணன் உத்தரவிட்டுள்ளார்.

டி.டி.வி தினகரன் ஆதரவாளர்களான 18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டமையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கின் விசாரணை சென்னை உயர் நீதிமன்ற 3 ஆவது நீதிபதியான எம்.சத்தியநாராயணன் முன்பாக நடந்து வருகிறது.

கடந்த 2 நாள்களாக 18 எம்.எல்.ஏக்கள் தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் பி.எஸ்.ராமன், மோகன் பராசரன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். மூன்றாவது நாளாக நேற்றுமுன்தினம் விசாரணை நடந்தது.

இந்த நிலையில், விசாரணையை ஒகஸ்ட் 3 ஆம் திகதிக்கு நீதிபதி தள்ளிவைத்தார். அன்றைய தினமும் தொடர்ந்து ஆர்யமா சுந்தரம் ஆஜராகி வாதிடவுள்ளார்.

ஏற்கெனவே, இந்த வழக்கில் ஜூலை 23 முதல் 5 நாள்களுக்கு தொடர்ந்து விசாரணை நடக்கும் என நீதிபதி சத்தியநாராயணன் அறிவித்திருந்தார். 3 நாள்கள் தொடர்ந்து விசாரணை நடந்த நிலையில், தற்போது வழக்கு ஒகஸ்ட் 3 ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. ஒகஸ்ட் 3, 6, 7 ஆகிய திகதிகளில் விசாரணை தொடர்ந்து நடக்கும் என நீதிபதி அறிவித்துள்ளார். 5 நாள்களாக அறிவிக்கப்பட்ட விசாரணை, இப்போது 6 நாள்களாக மாற்றப்பட்டுள்ளது.

# சொத்து வரி உயர்வை குறைக்காவிட்டால் போராட்டம்

## விஜயகாந்த் தெரிவிப்பு



தமிழக மக்களை மேலும் நெருக் கடி நிலைக்கு ஆளாக்காமல் உடனடியாக சொத்துவரியை குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விஜயகாந் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற அதிமுக அரசு சொத்து வரியை 50 சதவிகிதத்தில் இருந்து 100 சதவிகிதமாக உயர்த்தி மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சி பகுதியில் இருக்கும் குடியிருப்புகளுக்கு சொத்துவரி 50 சதவிகிதமும், வாடகை குடியிருப்புக் கட்டடங்களுக்கு 100 சதவிகிதமும், குடியிருப்பு அல்லாத கட்டடங்களுக்கு 100 சதவிகிதமும் சொத்து வரியை உயர்த்தி, வாடகைதாரர்கள், வணிகர்கள், பொதுமக்கள் என பல தரப் பட்டவர்களுக்கும், கடும் பாதிப்பை ஏற் படுத்தும் நிலையை இந்த எடப்பாடி அரசு ஏற்படுத்தி உள்ளது.

சொத்துவரியை உயர்த்தினால் வீட்டு உரிமையாளர்கள், வாடகைதாரர்களுக்கு, வாடகையை உயர்த்தும் சூழ்நிலை ஏற்படும். இது பொதுமக்களுக்கு கூடுதல் சுமையாக அமையும்.

எனவே அதிகாரமே இல்லாது அவசரகால நெருக்கடியில் சொத்து வரியை 100 சதவிகிதம் உயர்த்தப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே மக்களை நெருக்குகின்ற சொத்து வரியை உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனதே.மு.தி.க. சார்பில் தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன்.

தவறும் பட்சத்தில் மக்களுக்கான களத்தில், போராட்டம் உள்ளிட்ட அடுத்தக்கட்ட நடவடிக்கையில் தே.மு.தி.க. இறங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார் .

# பா.ஜ.கவை வரவிடாது தடுப்பதே ஒரே நோக்கம் மாநில கட்சி பிரதமர் வேட்பாளரை ஏற்கவும் தயார்!

## காங்கிரஸ் மேலிடம் திடீர் அறிவிப்பு

எதிர்வரும் 2019 நாடாளுமன்றத் தேர்தலில் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் பிரதமர் வேட்பாளராக மாநிலக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை ஏற்க தயார்.என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் – மே மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக பா.ஜ.க. இப்போதே தீவிர பிரசாரத்தில் ஈடுபடத்தொடங்கிவிட்டது. ஆனால், மாநிலக் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

இந்தநிலையில், கடந்த வாரம் நடந்த காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், கட்சித் தலைவர் ராகுல் காந்தியைப் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்துவது, அவர் தலைமையில் தேர்தலைச் சந்திப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அத்துடன், கூட்டணி தேர்வு, வேட்பாளர்கள் தேர்வு உட்பட எல்லா முடிவுகளையும் எடுக்க ராகுல் காந்திக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

ஆனால், மேற்குவங்கத்தில் முதல்வரும் திரிணமூல் காங்கிரஸ்கட்சித்தலைவருமானமம்தா பானர்ஜி, உத்தரபிரதேசத்தில் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் உட்பட மாநிலக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் ராகுல் காந்தி தலைமையை ஏற்க தயக்கம் காட்டி வருகின்றனர். இதற்கிடையில், மம்தா பானர்ஜி தனியாக மெகா கூட்டணி அமைக்க முயற்சித்து வருகிறார்.

பிஹாரில் லாலுபிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதா தளமும் ராகுலை ஏற்க தயக்கம் காட்டி வருகிறது. இதையடுத்து, பிரதமர் பதவியை விட்டுத்தர தயார் என்றும், பிரதமர் வேட்பாளராக மாநிலக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தேர்வு செய்யவும் தயார் என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் மேலிட வட்டாரங்கள் கூறும்போது –

"தேர்தலில் அதிக இடங்களைக் கைப்பற்றும் கட்சியைச் சேர்ந்த ஒருவரை பிரதமராக ஏற்பது அல்லது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரை (ராகுல் காந்தி) பிரதமராக ஏற்பதில் ஒருமித்த கருத்து ஏற்படாத நிலையில், மாநிலக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை பிரதமர் வேட்பாளராக ஏற்க கட்சி மேலிடம் முடிவெடுத்துள்ளது" என்றனர்.

பா.ஜ.கவை வரவிடக் கூடாது என்ற ஒரே நோக்கத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என காங்கிரஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

# ஆந்திராவில் செம்மரம் வெட்டிய 4 தமிழர்கள் கைது

## பொலிஸ் வானத்தை நோக்கி சுட்டதால் அங்கு பரபரப்பு



ஆந்திராவில் செம்மரம் வெட்டிய நான்கு தமிழர்களை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆந்திர மாநிலம் திருப்பதி அருகே ஸ்ரீவாரி மெட்டு வனப்பகுதியில் சிலர் செம்மரம் வெட்டுகின்றனர் எனப் பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து அந்தப் பகுதிக்கு பொலிஸார் விரைந்து சென்றனர். பொலிஸாரைக் கண்டதும் செம்மரங்களை வெட்டியவர்கள் பொலிஸார் மீது கற்களால் தாக்குதல் நடத்தினர்.

அவர்களிடம் இருந்து தப்பிக்க பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. அங்கு செம்மரம் வெட்டிய நான்கு தமிழர்களை கைது செய்தனர்.

விசாரணையில் அவர்கள் திருவண்ணாமலையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்தது. மேலும் பலர் அங்கிருந்து தப்பியோடினர். கைதானவர்களிடம் இருந்து ரூ.13 லட்சம் மதிப்பிலான செம்மரங்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

# இந்திய மாணவர் ஆஸியில் கொலை

## இளம் பெண் கைது

ஆஸ்திரேலியாவில் இந்திய மாணவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இளம்பெண்ணை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகருக்கு அருகே வசித்து வந்தவர் மவுலின் ரதோட் (வயது 25). இந்திய மாணவரான இவர் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் ஆஸ்திரேலியா சென்று, அங்குள்ள கல்லூரி ஒன்றில் கணக்கியல் துறையில் பயின்று வந்தார். இவருக்கும், மேற்கு மெல்போர்னின் புறநகர் பகுதியான சன்பரியில் வசித்து வரும் 19 வயது இளம்பெண் ஒருவருக்கும் வலைத்தளம் மூலம் பழக்கம் ஏற்பட்டது. தனியாக வசித்து வரும் அந்த இளம் பெண்ணை பார்ப்பதற்காக மவுலின் ரதோட் கடந்த 23 ஆம் திகதி அந்த பெண்ணின் வீட்டுக்குச் சென்றார்.

பின்னர் அங்கே படுகாயமடைந்து கிடந்த மவுலின் ரதோடை சிலர் மீட்டு அம்புலன்ஸ் மூலம் உள்ளூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி கடந்த செவ்வாய்க் கிழமை இரவு மவுலின் ரதோட் உயிரிழந்தார்.

இது தொடர்பாக அந்த இளம் பெண்ணை பொலிஸார் கைது செய்து மெல்போர்ன் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அவரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

கொல்லப்பட்ட மவுலின் ரதோட், தனது பெற்றோருக்கு ஒரே மகன் என அவரது நண்பர் கூறியுள்ளார். இந்த கொலைக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது.

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் அனந்தி சசிதரன்.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் எனக்குப் பல வழிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. கைத்துப்பாக்கிவிவகாரம் குறித்து அவைத் தலைவர் பாதுகாப்பு அமைச்சிடம் கேட்டு உண்மையைச் சபையில் வெளிப்படுத்த வேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார்.

நேற்றைய மாகாண சபை அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த அமர்வில் உறுப்பினர் அயுப் அஸ்மின் தன் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் குறித்துத் தன்னிலை விளக்கமளிக்கையிலேயே அனந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபையின் கடந்த அமர்வில் நான் கலந்து கொள்ளாதபோதிலும் என் மீது உறுப்பினர் அஸ்மின் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். உண்மைக்குப் புறம்பான வகையில் என் மீது முன்வைத்த அவருடைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நான் என்னுடைய விளக்கத்தை அளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அரசியலுக்கு விரும்பி வந்தவர் நான் அல்லன். ஆனாலும் பாதிக்கப்பட்ட பெண் என்ற அடிப்படையில் அரசியலுக்கு வந்திருந்தாலும் மக்கள் என்னை ஆதரித்து பெருமளவிலான வாக்குகளையும் அளித்திருக்கின்றனர். அவ்வாறு மக்களின் வாக்குகளைப் பெற்று நாங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற போதுபோனஸ்பட்டியல்மூலமாக வந்திருக்கும் அஸ்மின் எங்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றார்.

அவ்வாறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதாயின் போதுமான ஆதாரங்களை சபையில் சமர்ப்பித்திருக்க வேண்டும். அவ்வாறு ஆதாரங்கள் எதுவுமற்ற நிலையில் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்தச் சபையையும் பிழையாக வழிநடத்த முயன்றிருக்கின்றார். நான் சிறுவயதிலிருந்தே போராட்டத்துக்கு ஆதரவைத் தெரிவித்து வந்திருக்கிறேன்.

அவ்வாறு போராட்டப் பாதையில் வந்த எங்களுக்கு ஆயுதம் என்பது புதிய விடயமல்ல. இந்த நாட்டில் பெண்கள், சிறுவர்கள் உட்பட ஒட்டுமொத்த மக்களுக்கும் பாதுகாப்பில்லாத நிலை இருக்கையில் அரசிடம் பாதுகாப்புக் கோருவது தவிர்க்க முடியாதது. ஆனாலும் அவ்வாறான பாதுகாப்புக்குத் துப்பாக்கியை நான் பெற்றுக் கொள்ளாதபோதிலும் நான் துப்பாக்கியைப் பெற்றுக் கொண்டேன் எனக் கூறுவதன் நோக்கம் அல்லது பின்னணி பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அதாவது நான் கைத்துப்பாக்கி பெற்றேன் என எந்தப் பின்னணியில், எந்த நோக்கத்தின் அடிப்படையில், சொல்லப்பட்டிருக்கின்றதென்பதையும் நாம் ஆராய வேண்டும். என் மீதான அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து இத்தகைய பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கலாமெனக் கருதுகிறேன்.

ஆகவே இத்தகைய குற்றச்சாட்டுக்களால் எனக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைக் கருத்திற்கொண்டு இதனைச் சபை கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு நான் கைத்துப்பாக்கி பெறவில்லை என்று கூறும் அதேவேளை, நான் அதைப் பெற்றேனா இல்லையா என்பதைப் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து தகவல்களைப் பெற்று அவைத் தலைவர் உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன் – என்றார். (ஐ-7)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்களிடம் துப்பாக்கி இல்லை என்று யாரும் நினைக்கவேண்டாமென்று கூறும் உறுப்பினர்களும் சபையில் உள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண சபையின் 128 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் சபா மண்டபத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் துப்பாக்கி வைத்திருக்கிறார் என உறுப்பினர் அஸ்மின் கூறிய விடயம் குறித்து அனந்தி சசிதரன் தன்னிலை விளக்கமொன்றை அளித்தார்.

அப்போது இந்த விடயங்கள் குறித்து உறுப்பினர்களும் தமது வாதப்பிரதிவாதங்களை முன்வைத்தனர். அதனைஒட்டிகருத்து வெளியிடுகையிலேயே சத்தியலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஓர் அமைச்சர் குறித்துப் பொய்யான கதைகளைச் சபைக்குக் கொண்டு வந்து கதைக்கும் போது அந்த அமைச்சரின் மனம் எப்படிவேதனைப்படும் என்பதை அனுபவிக்கும்போதே தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். ஏனெனில் முன்னர் நான் அமைச்சராக இருந்தபோது என் மீதும் இவ்வாறு பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அந்தக் குற்றச்சாட்டையே அனந்தி சசிதரன்தான் முன்வைத்திருந்தார்.

இப்போது அவர் மீதும் அவ்வாறானதொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றபோது மனம் என்ன வேதனைப்படும் என்பதை அவரும் புரிந்துகொண்டிருப்பார் என நினைக்கிறேன். உறுப்பினர்களின் கௌரவத்தைப் பாதிக்கின்றபோது அதன் வலியை உணர முடியும்.

இங்கு சிலரிடம் அனுமதியுடனான துப்பாக்கிகள் இருக்கின்றன. அதேநேரம் அனுமதியைப் பெறாமலும் சிலர் துப்பாக்கியை வைத்திருக்கின்றனர். அத்தோடு இன்னும் சிலர், 'எங்களிடம் துப்பாக்கி இல்லை என்று நினைக்காதையுங்கோ. எங்களிடம் துப்பாக்கி உள்ளது' என்றும் கூறுகின்றார்கள் – என்றார்.

இதன்போது எழுந்த உறுப்பினர் சிவாஜிலிங்கம், தன்னிடமும் ஒரு துப்பாக்கி இருந்ததாகவும், அதனைத் தற்போது காணவில்லை என்றும், அந்தத் துப்பாக்கி எங்கிருக்கிறதென்றே தெரியாது எனவும் குறிப்பிட்டார்.

தான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும் அதன் பின்னரும் தனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாகவும், இன்று எதுவுமே இல்லாமல் தான் செயற்பட்டு வருகிறார் என்றும் கூறினார். (ஐ-7)

## அனந்தியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. காலநேரம் வரும்போது அல்லது தேவை ஏற்படும்போது அதற்கான ஆதாரங்களை நாங்கள் வெளிப்படுத்துவோம் என மாகாண சபை உறுப்பினர் அயுப் அஸ்மின் நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற சபை அமர்விலேயே அவர் இதனைக் கூறினார்.

கைத்துப்பாக்கியை வைத்திருக்கிறார் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து நேற்று அனந்தி சசிதரன் தன்னிலை விளக்கம் அளித்தார்.

இதன்போது அஸ்மினின் குற்றச்சாட்டை மறுத்தமையுடன், அஸ்மின் போன்றவர்களிடம் இருந்தும் தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்ற கருத்தையும் சபையில் முன்வைத்திருந்தார்.

இதனையடுத்து சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பிய அஸ்மின், தனது விளக்கத்தையும் அளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் சபையில் தெரிவித்த விடயத்துக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் எனக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. அத்தோடு என்னிடமிருந்தும் பாதுகாப்பு வேண்டுமெனவும் தற்போது அனந்தி கூறியிருக்கின்றார். ஆனால் நான் எந்த அச்சுறுத்தலையும் விடவில்லை. அவருடைய பாதுகாப்புக்கு எதிராகக் கருத்தையும் முன்வைக்கவில்லை.

ஒரு பொய்யை உண்மையாக்குவதற்கும் உண்மையைப் பொய்யாக்குவதற்கும் நீண்டதொரு விவாதம் அவசியம். ஆனால் அமைச்சர் கைத்துப்பாக்கி வைத்திருக்கும் விடயத்தில் உண்மைக்குப் புறம்பாக எதனையும் நான் முன்வைக்கவில்லை. அவ்வாறு கைத்துப்பாக்கி வேண்டுமெனக் கேட்டு அவர் கையொப்பத்துடன் அனுப்பிய கடிதம் என்னிடம் இருக்கின்றது. அவருடைய விலாசத்துக்குக் கைத்துப்பாக்கியும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் பொய்யாகக் குற்றச்சாட்டுக்களையோ அல்லது அரசியல் காழ்புணர்வினாலேயோ நான் எதனையும் தெரிவிக்கவில்லை என்பதை மீளவும் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

நான் இந்த விடயத்தை சபையில் ஏன் குறிப்பிட்டேன் என்றால், அமைச்சர்கள் மக்களுக்காக எதனையும் செய்யாது தங்களது சொந்தத் தேவைகளுக்காகச் செயற்படுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்துவதற்காகவே தான். எனவே தேவைகள் ஏற்படும்போது அல்லது காலநேரம் வரும்போது அத்தகைய விடயங்களை நாங்களும் வெளிப்படுத்த வேண்டியிருக்கும். அவர் மீது எனக்கு எந்த அரசியல் காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. உண்மையையே கூறியிருக்கின்றேன் – என்றார். (ஐ-7)

## இஸ்லாத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோபத்தை வெளிப்படுத்தினார் தந்தை.

இந்தச்சம்பவம்யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சம்பவத்தில் முதுகு மற்றும் கைகளில்படுகாயமடைந்த மகன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி கலட்டிச் சந்தியைச் சேர்ந்த பிரபாகரன் பிரதீபன் (தற்போதைய பெயர் அப்துல்லா) (வயது 28) என்ற இளைஞரே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் பிரதீபன் தெரிவித்தவை வருமாறு:–

யாழ்ப்பாணம் நகரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றேன்.

குடும்பத்தினரின் எதிர்ப்பையும் மீறி நான்கு வருடங்களுக்கு முன் இஸ்லாம் மதத்துக்கு மாறினேன். அத்துடன் எனது பெயரையும் அப்துல்லா என மாற்றினேன்.

இஸ்லாமியர்களின் குரான் நூலை படித்தேன். அதில் கூறப்பட்டுள்ள போதனைகள் என்னை மிகவும் கவர்ந்தன. அவை மீது நம்பிக்கை கொண்டேன்.

அதனால் இஸ்லாம் மதத்துக்கு மாறினேன். இஸ்லாம் மீது மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

அதனால் எனது தந்தை என் மீது கடும் கோபம் கொண்டுள்ளார். நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7 மணியளவில் வீட்டுக்குச் சென்றேன்.

என்னைக் கண்டதும் தந்தை ஆத்திரமடைந்து என்னைக் கத்தியால் கடுமையாகத் தாக்கினார்.

நான் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் பின்னிரவு வந்தேன். எனினும் காவல் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் என்னை உள்ளே அனுமதிக்கவில்லை.

இரவில் அனுமதிக்கப்பட்டால் விடுதியில் தங்கியிருந்து மட்டுமே சிகிச்சை பெற முடியும். மருந்து கட்டவேண்டுமாயின் நாளை (நேற்று) காலை வர வேண்டும் என்று கூறி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்னைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

நான் மீண்டும் நேற்றுக் காலை வைத்தியசாலைக்கு வந்தபோது 24ஆம் விடுதியில் அனுமதித்துவிட்டார்கள் – என்றார்.

பிரதீபனுக்கு மூன்று சகோதரிகள் உள்ளனர். அவர்களில் மூத்த சகோதரிகள் இருவர் திருமணமாகிவிட்டனர். இளைய சகோதரிக்குத் திருமணமாகவில்லை.

எனது பிள்ளை இவ்வாறு நடந்துகொள்வது எமக்கு கஷ்டமாக உள்ளது என்று தாயார் கண்கலங்கினார். (ஐ-7)

## ராணுவத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணிகள் முன்வைத்த விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கை முகத் தோற்றளவில் விசாரணை செய்து சாட்சிகளை ஒழுங்கு படுத்துவதே சுருக்கமுறையற்ற விசாரணையாகும். எனவே சுருக்க முறையற்ற விசாரணையை முன்னெடுத்து வழக்கை மேல் நீதிமன்றுக்கு பாரப் படுத்துவதே நீதிவான் நீதிமன்றின் கடமையாகும்.

இந்த வழக்கில் எதிரிகள் தரப்பால் முன்வைக்கப்பட்ட நிழற்பிரதி வாக்குமூலங்களை வைத்து சுருக்கமுறையற்ற விசாரணையை நடத்த முடியாது என்ற விண்ணப்பத்தை மன்று நிராகரிக்கின்றது.

இந்த வழக்கு மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்படலாம். சட்ட மா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் போது, எதிரிகள் தரப்பு தமது ஆட்சேபனையை மேல் நீதிமன்றில் முன்வைக்க முடியும் என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் கட்டளை வழங்கினார்.

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிப் பகுதியில் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரின் வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணைக்காக வந்தது.

இதன்போது மன்றில் சந்தேகநபர்களான 5 இராணுவத்தினரும் முன்னிலையாகினர். வழக்கின் 3ஆவது சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் உயிரிழந்துவிட்டார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி நாக ரட்ணம் நிஷாந்த் முன்னிலையானார். இராணுவத்தினர் சார்பில் தென்னிலங்கை சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

இராணுவத்தினருக்கு எதிரான சாட்சிகள் பொலிஸில் வழங்கிய வாக்கு மூலங்களின் உண்மைப் பிரதிகள் இல்லை. அவற்றின் நிழல் பிரதிகளை வைத்து வழக்கை நடத்த முடியாது. அதனால் இந்த வழக்கிலிருந்து இராணுவத்தினர் ஐவரையும் விடுவிக்கவேண்டும் என்று சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கடந்த தவணையின் போது மன்றில் ஆட்சேபனை வெளியிட்டார்.

சாட்சி ஒருவர் இல்லாத போதுதான் அவர் வழங்கிய பொலிஸ் வாக்கு மூலத்தின் உண்மைப் பிரதி இருக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கில் சாட்சிகள் மன்றில் தோன்றி சாட்சியமளிப்பதால், அவர்களின் பொலிஸ் வாக்குமூலத்தின் நிழல் பிரதியை முன்வைத்தால் போதும் என்று அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் மன்றுரைத்திருந்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான், வழக்கை நிழல் பிரதியுடன் தொடர்வது தொடர்பில் எதிரிகள் தரப்பால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனை குறித்த மன்றின் கட்டளை நேற்று வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

அதனடிப்படையில் எதிரிகள் தரப்பு விண்ணப்பம் நேற்று நீதிவான் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

வழக்கின் சுருக்கமுறையற்ற விசாரணைகள் வரும் செப்ரெம்பர் 2ஆம் திகதி இடம்பெறும் என்றும் நீதிமன்று தவணையிட்டது. (ஐ)

## இஸட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று வியாழக்கிழமை மாலை வெளியிடப்பட்டன.

இந்த ஆண்டு 27 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அனுமதிகள் நவம்பர் மாத ஆரம்பத்தில் இடம் பெறும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (ஐ)

## பௌத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீற்றத்துடன் தெரிவித்தார்.

நேற்று மாலை பிலியந்தல பிரதேசத்தில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

பௌத்த சமய பாடசாலையொன்றை ஆரம்பிப்பதாயின் அல்லது விகாரை ஒன்றைக் கட்டுவதாயின் பிரதேச சபையிலுள்ள சர்வமத தலைவர்கள் குழுவில் அனுமதி பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அந்தக் குழுவிலுள்ள ஒரு சமயத்தைச் சேர்ந்தவர் பௌத்த சமய பாடசாலை அமைக்க விரும்பாவிடினும் அதனை அமைக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகின்றது எனவும் மஹிந்த ராஜபக்ஷ எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

# ஆசியக் கிண்ணம் செப்ரெம்பரில்




ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கை அணி ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுடன் 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ளது. அத்தோடு இத் தொடரில் இந்தியா – பாகிஸ்தான் மோதும் போட்டியும் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடத்தப்படுகின்றது.

அந்த வகையில் 2018 ஆம் ஆண்டு ஆசிய கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பாகிஸ்தான் அணி பங்கேற்பதில் சந்தேகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஆசிய கிண்ணப் போட்டிகளை ஐக்கிய அரபு அமீரக நாடுகளில் நடத்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி டுபாயில் ஆசியக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகின்றது.

இப் போட்டிகள் அபுதாபி மற்றும் டுபாயில் நடத்தப்படுகின்றன. ஆசிய கிண்ணத்தில் விளையாடுவதற்கு இலங்கை, நடப்பு சம்பியனான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய 5 அணிகளும் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன.

இதில் எஞ்சிய ஓர் இடத்துக்காக ஹொங்கொங், மலேசியா, நேபாளம், ஓமான், சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் மோதுகின்றன.

பிரிக்கப்பட்டுள்ள இரு குழுக்களில் ஏ பிரிவில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தகுதி பெறும் நாடும் பி பிரிவில் இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

முதலிரு இடங்களைப் பெறும் அணிகள் சுப்பர் – 4 சுற்றுக்கு முன்னேறும். ஒவ்வொரு அணியும் மற்றொரு அணியுடன் ஒருமுறை மோதும்.

இதில் அதிக புள்ளிகளைப் பெறும் முதலிரு அணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு முன்னேறும். இலங்கை அணி தனது முதல் போட்டியில் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி பங்களாதேஷுடன் மோதுகின்றது.

# 1000 ஆவது டெஸ்ட் போட்டியை எதிர்கொள்கிறது இங்கிலாந்து

இங்கிலாந்து அணி 1000ஆவது டெஸ்டில் களமிறங்கக் காத்திருக்கின்றது. இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் இந்தச் சாதனையை எட்டவுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு 1877ஆம் ஆண்டு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்தது. அதே ஆண்டில் முதல் டெஸ்டில் களமிறங்கியது இங்கிலாந்து.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இப்போட்டி மெல்போர்னில் நடைபெற்றது. இதுவரை 999 டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து பங்கேற்றுள்ளது.

இதில் 357 போட்டிகளில் வெற்றியும் (35.73 சதவீதம்) 297 போட்டிகளில் தோல்வியும் கண்ட இங்கிலாந்து 345 போட்டிகளை சமநிலையில் முடித்துள்ளது.

அதிகபட்சமாக ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 346 டெஸ்ட்களில் பங்கேற்றது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 1ஆம் திகதி பர்மிங்ஹாமில் இந்தியாவுக்கு எதிராக களமிறங்கவுள்ள இங்கிலாந்து 1000 டெஸ்ட்களில் பங்கேற்ற முதல் அணி என்ற சாதனையைப் படைக்கவுள்ளது.

இரண்டாவது இடத்தில் ஆஸி. (812 டெஸ்ட்) உள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் (530) மூன்றாவது இடத்தில் உள்ளது.

# பார்சிலோனா அணியில் இணைந்தார் மெல்கம்



பிரேஸில் உதைபந்து அணியின் நட்சத்திர வீரரான மெல்கமை, ஸ்பெயினின் முன்னணி கால்பந்து கழக அணியான பார்சிலோனா அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன்படி, சுமார் 47.89 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட அவர், எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு பார்சிலோனா அணிக்காக விளையாடவுள்ளார்.

பார்சிலோனா அணியில் மெல்கம் இணைந்திருக்கின்றமை, அந்த அணிக்கு மேலும் வலு சேர்க்கும் விடயமாக பார்க்கப்படுகின்றது.

21 வயதான மெல்கம், இதற்கு முன்னதாக பிரான்ஸின் முன்னணி கழக அணியான கிரோடின்ஸ் போர்டியாக்ஸ் அணிக்காக விளையாடி வந்தார். இந்நிலையில், அவரை தற்போது மிகப் பெரிய தொகைக்கு பார்சிலோனா அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

பிரான்ஸில் நடைபெறும் பிரான்ஸ் லீக் உதைபந்து தொடரில், கிரோடின்ஸ் போர்டியாக்ஸ் அணிக்காக விளையாடிய மெல்கம், 2017 – 2018ஆம் ஆண்டு பருவக் காலங்களில் 35 போட்டிகளில் விளையாடி 12 கோல்கள் அடித்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு கிரோடின்ஸ் போர்டியாக்ஸ் அணியில் இணைந்த மெல்கம், 96 போட்டிகளில் விளையாடி 23 கோல்களை அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்திய தீவுகள் திரில் வெற்றி

பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, மேற்கிந்திய தீவுகள் அணி 1:1 என சமநிலைப்படுத்தியுள்ளது.

அத்தோடு முதல் போட்டியில் பெற்ற தோல்விக்கு இப்போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி பதிலடியும் கொடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை கயானா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 49.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 271 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக சிம்ரொன் ஹெட்மியர் 125 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் ரூபெல் ஹொசைன் 3 விக்கெட்டுகளையும், முஸ்தாபிஜுர் ரஹ்மான் மற்றும் சகிப் அல் ஹசன் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 272 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணியால், 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 268 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.



பங்களாதேஷ் அணிக்கு இறுதி ஓவரில் 6 பந்துகளுக்கு 8 ஓட்டங்களே பெற வேண்டியிருந்தது. ஆனால் இந்த ஓவரை கச்சிதமாக வீசிய அணித்தலைவர் ஜேசன் ஹோல்டர், 5 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தார்.

இப்போட்டியில், பங்களாதேஷ் அணி சார்பில் அதிகபட்ச ஓட்டங்களாக முஷ்பிகுர் ரஹிம் 68 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 56 ஓட்டங்களையும், தமீம் இக்பால் 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்த இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி, எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# தங்கக் கிண்ண கரப்பந்தாட்டம் அடுத்த மாதம்

இலங்கை விளையாட்டுத்துறையில் தனி ஒரு விளையாட்டு நிகழ்ச்சியில் மிக அதிகமான விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் டயலொக் ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஒகஸ்ட் 10 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒகஸ்ட் மாத மத்திய பகுதியில் மாவட்ட மட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

வழமைபோல் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் போட்டிகள் நடத்தப்படுவதுடன் பகிரங்க பிரிவிலும் இருபாலாருக்கும் போட்டிகள் இடம்பெறும்.

இப் போட்டிகளில் 4,000 க்கும் மேற்பட்ட அணிகளைச் சேர்ந்த 48 ஆயிரம் வீர, வீராங்கனைகள் தங்களது கரப்பந்தாட்ட ஆற்றல்களை வெளிப்படுத்த காத்திருக்கின்றனர் என டயலொக் ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டிகள் தொடர்பாக நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது விவரிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டியவிடம் டயலொக் ஆசியாட்டா நிறுவனத்தின் குறியீட்டை ஊடக பொது முகாமையாளர் ஹர்ஷா சமரநாயக்க வழங்கினார். அத்துடன் இந் நிகழ்வில் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் உதவித் தலைவர் சி. ரத்னமுதலி, பொதுச் செயலாளர் ஏ.எஸ். நாலக்க, உதவித் தலைவர் காஞ்சன ஜயரட்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் நடத்தப்பட்டு வரும் ஜனாதிபதி தங்கக் கிண்ண கரபந்தாட்டப் போட்டிகளுக்கு 13 ஆவது வருடமாக டயலொக் ஆசியாட்டா நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது.

மாவட்ட மட்டப் போட்டிகளில் சம்பியனாகும் நான்கு அணிகள் தேசிய மட்ட இரண்டாம் சுற்றில் விளையாடும். இப் போட்டிகள் காலியில் எதிர்வரும் நவம்பர் 2,3,4 ஆம் திகதிகளில் நடைபெறும். இப் போட்டிகளிலிருந்து தேசிய மட்ட இறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் 4 அணிகள் மஹரகம, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உள்ளக அரங்கில் நடைபெறும் இறுதிப் போட்டிகளில் விளையாட தகுதிபெறும். இப் போட்டிகள் டிசம்பர் 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் சம்பியனாகும் அணிகளுக்கு ஜனாதிபதி தங்கக் கிண்ணங்களுடன் தங்கப் பதக்கங்களும் பணப்பரிசுகளும் வழங்கப்படும். இரண்டாம் இடத்தைப் பெறும் அணிகளுக்கு வெள்ளிப் பதக்கங்களுடன் பணப்பரிசுகள் வழங்கப்படும்.

அத்துடன் 22 வயதுக்குட்பட்ட பிரிவிலும் பகிரங்க பிரிவிலும் அதி சிறந்த வீரர்கள், வீராங்கனைகள் நால்வருக்கு விருதுகளுடன் பணப்பரிசுகளும் வழங்கப்படும்.

# அனந்தியின் கைத்துப்பாக்கியால் சபையில் பெரும் கூச்சல் குழப்பம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் கைத்துப்பாக்கியைப் பெற்றுக் கொண்டுள்ளார் எனக் கடந்த அமர்வில் உறுப்பினர் அயுப் அஸ்மின் கூறிய விடயம் நேற்றைய வடக்கு மாகாண சபை அமர்வில் பெரும் சர்ச்சையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது.

இதனால் சபையில் ஆளுங்கட்சியினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையே பலத்த வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 128 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலக சபா மண்டபத்தில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் அனந்தி சசிதரனிடம் கைத்துப்பாக்கி இருப்பதாக உறுப்பினர் அஸ்மின் கூறிய விடயம் குறித்து அனந்தி தன்னிலை விளக்கமொன்றை அளித்தார்.

தான் கைத்துப்பாக்கி எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை என்றும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத் தன் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன எனவும், அத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அவர் கோரினார்.

இதன்போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையொன்றை எழுப்பிய உறுப்பினர் அஸ்மின், தான் உண்மையையே சொன்னார் என்றும், அதற்கான ஆதாரம் இருப்பதாகவும் கூறிக் கைத்துப்பாக்கிக்கு அனந்தி விண்ணப்பித்ததாகக் கூறப்படும் கடிதமொன்றையும் சபையில் காட்டினார். தன்னால் அனந்திக்கு அச்சுறுத்தல் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது எழுந்த உறுப்பினர் சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் துப்பாக்கியைப் பெற்றிருந்தாலும் தவறில்லை, ஆனால் அவர் பெறவில்லை என்று கூறுகின்றபோது அவர் பெற்றார் என்றால் அந்தத் துப்பாக்கிக்கான அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும், அதனை விடுத்து இந்த விடயத்தில் தொடர்ந்தும் முரண்டு பட்டுக் கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை – என்றார்.

இந்நிலையில் சபையில் ஆளுங்கட்சியாக உள்ள கூட்டமைப்புக்குள்ளேயே எதிர்க்கட்சி இருப்பதாகவும், அவர்களே ஒவ்வொரு சபைக் கூட்டத்திலும் தமக்குள்ளே காணப்படும் கட்சிப் பிரச்சினைகள் மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிக்கின்றனர் எனவும், இதனால் எதிர்க்கட்சியாக உள்ள நாங்கள் மக்களின் பிரச்சினைகள், தேவைகளைக் கூட வெளிப்படுத்த முடியாத நிலை இருப்பதாகவும் எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் குறிப்பிட்டார்.

அத்தோடு கைத்துப்பாக்கி விடயத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த இருவரில் ஒருவர் பொய்யுரைக்கின்றார். என்றும், ஆகவே அந்தப் பொய்யைச் சொல்பவர் யார் என்பதையும் இணங்கண்டு இந்தப் பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தி இந்த விடயத்தை இத்தோடு முடித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் எமது மக்கள் பிரச்சினைகள், தேவைகள் குறித்து பேசுவதற்குப் பல விடயங்கள் இருக்கின்ற போது இந்த சிறிய விடயத்தில் முரண்டு பட்டுக் கொண்டு நேரத்தை வீணடிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து அனந்தி கைத்துப்பாக்கி பெற்றாரா, இல்லையா என்பது குறித்து ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கிடையே வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று சபையில் பெரும் குழப்பமே ஏற்பட்டது. உறுப்பினர் சயந்தன், அனந்தி கைத்துப்பாக்கியைக் கோரியதற்கான ஆதாரம் இருப்பதாகக் கூறி ஒரு கடிதத்தை சபையில் வாசித்துக் காட்டினார். அதற்குப் பதிலளித்த சிவாஜிலிங்கம், கைத்துப்பாக்கியை வைத்திருப்பதாக கூறியவர்கள் தற்போது அதிலிருந்து பின்வாங்கி கைத்துப்பாக்கிக்கு விண்ணப்பித்ததாகக் கூறுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கைத்துப்பாக்கி கோருவதோ அல்லது வைத்திருப்பதோ தவறு இல்லை என்றும் சபையில் பலராலும் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து ஒருவாறு இந்த விடயம் அவைத் தலைவர் சிவஞானத்தால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (ஐ-7)

# மன்னாரில் மீட்ட எலும்புக்கூடுகளில் கூரிய ஆயுதத் தாக்குதல் காயங்கள்

## நிபுணர்கள் அதிர்ச்சி தகவல்

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டுவரும் அகழ்வுப் பணிகளின்போது மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் கூரிய ஆயுதத்தால் பலமாகத் தாக்கப்பட்டமையால் ஏற்பட்ட முறிவுகள் காணப்படுகின்றன என நிபுணர்கள் அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை 42ஆவது நாளாக அகழ்வுப் பணிகள் தொடர்ந்து வரும் நிலையில், அங்கு அகழ்வில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இதுவரை கண்டெடுக்கப்பட்ட எந்தவொரு எலும்புக்கூட்டிலும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான எவ்வித தழும்புகளும் இல்லை என்றும் நிபுணர்கள் கூறினர்.

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் ஐந்து சிறு பிள்ளைகளின் எலும்புக்கூடுக ளும் காணப்படுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தப் புதைகுழியில் காணப்பட்ட எலும்புக்கூடுகளை பொறுத்தமட்டில், உடல்கள் ஒழுங்கற்ற வகையில் அவசர அவசரமாக புதைக்கப்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட் டுள்ளன எனப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்தச் சடலங்கள் எக்காலப்பகுதியில் புதைக்கப்பட்டவை என்பது தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

மன்னார் நீதவான் ரி.ஜே.பிரபாகரனின் மேற்பார்வையில் அகழ்வு பணிகள் 42ஆவது நாளாக தொடர்ந்து வருகின்ற நிலையில், நேற்றைய அகழ்வு பணிகளில் ஹோமாகம பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும் இணைந்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள்

35ஆம் ஆண்டு நினைவஞ்சலி

- 1983 ஆடி 25, 27 -

தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் ஆடி - 25

இதுவரை போராட்டத்தில் கொல்லப்பட்ட 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள், வீரமறவர்கள், தியாகிகள், வீரமக்கள் ஆகியோருக்கும் மற்றும் படைகளாலும், இன வெறியர்களாலும் இனப் படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலி. மாவீரர்கள், வீர மறவர்கள், தியாகிகள், வீர மக்கள், பொதுமக்கள் உட்பட அனைத்துத் தமிழ்த் தேசிய வீரர்களுக்கும் எமது இயக்கம் இருபத்தியைந்து ஆண்டுகளாக தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் என ஆடி 25 ஐப் பிரகடனப்படுத்தி அஞ்சலி செலுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.





தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, போராளிகளான ஜெகன், தேவன், நடேசுதாசன், சிவபாதம், சிறீக்குமார், குமார், மரியம்பிள்ளை, குமாரகுலசிங்கம் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கண்ணீர் அஞ்சலி!

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் [ரெலோ] TELO

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.